விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 25 வெள்ளிக்கிழமை (09.07.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 202

## ஜனநாயக ரீதியாக போராடும் தரப்பை அரசு ஒடுக்குகின்றது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)
அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக ஜனநாயக ரீதியாக போராடும் தரப்பை ஒடுக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருகிறது ▷19

## மின்சாரம் தாக்கியதில் இளம் குடும்பப் பெண் பலி

### முல்லை சுதந்திரபுரத்தில் சம்பவம்



(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் கொலனி பகுதி ▷19

## கொரோனா +1,223

(கொழும்பு)
நாட்டில்மேலும்1,223 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இவர்கள் அனை ▷19

## கொரோனா 40 பேர் பலி

(கொழும்பு)
கொரோனாவால் மேலும் 40 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அந்த வகையில், 30- 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் 11 ஆண்களும் ▷19

# தந்தையைப்போல் விரும்பத்தகாத முடிவுகளை எடுக்கலாம்

### நிதி அமைச்சராக பதவியேற்றபின் பசில்



**(கொழும்பு)**
**ஒரு தந்தையைப்போல விரும்பத்தகாத முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கலாம் என நிதி அமைச்சராக பதவியேற்றபின் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

மக்களுக்கு அமைச்சராக அல்ல. மக்களுக்கு உதவியாளராக பணியாற்றத் தயாராக இருப்பதாக நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நிதி அமைச்சராக தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஊடகவியலாளர்களிடம் நிதி அமைச்சர் இந்த கருத்துக்களை குறிப் ▷19

## புளியங்குளம் பகுதியில் கனரக வாகனம் விபத்து

### இளைஞன் உயிரிழப்பு


(வவுனியா)
வவுனியா புளியங்குளம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர்


▷19


## யாழில் ஆசிரியர்களுக்கு கோவிட் தடுப்பூசி வழங்கும் பணி இன்று நடைபெறும்

### யாழில் கடந்த 4 நாட்களில் 38, 456 பேருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாடசாலை ஆசிரியர்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி வழங்கும் பணி இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள் ▷19



இராணுவ பல்கலைக் கழகத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள், பிக்குகள் உட்பட 31 பேர் நேற்று கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் அனைவரும் தனிமைப் படுத்தப்பட்டனர்.
(18ஆம் பக்கம் பார்க்க)



## உயர்கல்வியை இராணுவ மயமாக்குவதாக தெரிவிப்பதில் உண்மை இல்லை

– கல்வி அமைச்சர்



(கொழும்பு)
கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கண்காணிப்பின் ▷19

## கொரோனாத் தொற்றால் வவுனியாவில் பெண் ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)
வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் கோவிட் தொற்றுக் காரணமாக நேற்று மரணமடைந் ▷19

## யாழில் 16 பேர் உட்பட வடக்கில் 32 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் 16 பேர் உட்பட வடக்கில் 32 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 27 பேரும் யாழ். ▷19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# தென்மராட்சியில் மோதல் இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் சகோரர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று நடைபெற்றுள்ளது. மீன் வியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு மோதலாக மாறியதில் அண்ணனின் காதை தம்பியார் கடித்து காயப்படுத்தியுள்ளார்.

இதனால் கோபமடைந்த அண்ணன் அருகில் இருந்த தராசினை தூக்கி தம்பியின் தலையில் அடித்துள்ளார்.

தலை மற்றும் காதுப் பகுதியில் படுகாயமடைந்த 32 மற்றும் 37வயதான சகோதரர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ம-30)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### திரு. தயாநிதி கஜேந்திரன்

(இராஜா)

ஆடிப் பாடி மழலைகள் செய்து திரிந்த
அன்பிற்கோர் இருப்பிடமாய் அமைதியின்
உருவமாய் எம்முடன் உறவாடிய விருட்சம்
மொட்டு ஒன்று விரியமுன் கருகிவீழ்ந்து
ஆறு ஆண்டுகள் சென்றதோ!
இராஜா என்று அழைப்பதற்கு நீ இல்லையடா
நீயில்லா வெற்றிடங்கள் என்றும்
வெறுமைதாண்டா ராசா...
உன் நினைவுகளுடன் தலைமுறைகள் தாண்டியும்
காத்திருப்போம் உனக்காக, கண்ணிரண்டும் என்றும் நீர்த்திருப்பாய்.

இந்திர பிரஸ்ஷம்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (7158)

உன் நினைவுடன்
வாழ்ந்து கொண்டிருக்கும்
குடும்பத்தினர்

## தச்சந்தோப்பு சிந்தாமணி பிள்ளையார் ஆலயம்

### கூறுவிலை கோரல்

மேற்படி ஆலயத்தின் கீழ்வரும் திருத்த வேலைகள் செய்வதற்கான கூறுவிலைகள் அனுபவமுள்ள நிர்மாணிகளிடம் இருந்து ஆலய நிர்வாகத்தினரால் கோரப்படுகிறது.

- ஆலயக் கூரை திருத்த வேலை.
- ஆலயத்திற்கு வர்ணம் பூசுதல்.
- உள்வீதி நிலத்திற்கு கருங்கல் பதித்தல், முன்மண்டபத்திற்கு றெறாசோ (Terraso) பதித்தல்.
- வெள்ளிரும்பு கைபிடி வேலி (Hand Raul) முன்மண்டபத்தைச் சுற்றி அமைத்தல்.

மேற்படி வேலைகளை ஆலய நிர்வாகத்தினரிடம் தொடர்புகொண்டு பார்வையிடலாம். இவ் விளம்பரம் பதிவிட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள் கூறுவிலைகள் ஆலய நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும்.

சி. முருகேசு (முகாமையாளர்) 077 612 8431
ந. கணேசமூர்த்தி (செயலாளர்) 077 786 2353

(C-2305) ஆலய நிர்வாகம்

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்




கௌரவ

### அங்கஜன் இராமநாதன்

அவர்கள்

பாராளுமன்ற உறுப்பினர் - யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்
ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் - யாழ். மாவட்டம்

மக்களின் மைந்தனாய் வந்துதித்தே மக்களின் சேவகனாய் நிமிர்ந்து நிற்கும்
மன்னவன் அங்கஜன் அவனியிலே மழலையாய் பிறந்திட்ட நாள்தனில்
அன்னவன் பணிகளால் சிறந்தோங்கி அமைதி வழியிலே அபிவிருத்திப் பாதையில்
அன்பனாய், நண்பனாய், உற்ற உறவுமாய் அர்ப்பணிப்பு சேவைதனில் தலைவனாய்
வள்ளலாய் நமை வழிநடத்தும் நம் நாயகனை
அளவெட்டியின் எல்லைக் காவலனாய் வீற்றிருக்கும்
பெரியதம்பிரான் அருளால் வாழ்த்துகின்றோம்.

*நீ வாழி! வாழி!!*

(C-2303)

**க. கணேசதாஸ்** J.P ஓய்வுநிலைக் கிராம அலுவலர்
ஞானவைரவர் விளையாட்டுக் கழகம் அளவெட்டி வடக்கு, விவசாய அமைப்பினர்கள்,
[illegible] அமைப்பினர், அளவெட்டி வடக்கு பெரியதம்பிரான் ஆலயத்தினர்,
அளவெட்டி வாழ் அபிமானிகள்

அளவெட்டி வடக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசிலின் பதவிப்பிரமாணம் அரசியலமைப்பையும் இறையாண்மையையும் மீறும் செயலாகும்

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

(கொழும்பு)

**பாராளுமன்றத் தேர்தலின் போது பொதுஜன பெரமுனவினால் சமர்ப்பிக்கப்பட்ட மாவட்ட ரீதியான வேட்பாளர் பட்டியல் மற்றும் தேசியப் பட்டியல் ஆகியவற்றில் பெயர் உள்ளடக்கப்பட்டிருக்காத பசில் ராஜபக்ஷ, தற்போது வெற்றிடமாகியிருக்கும் தேசியப் பட்டியல் ஆசனத்திற்கு நியமிக்கப்பட்டிருப்பதானது அரசியலமைப்பையும் மக்களின் இறையாண்மையையும் முற்றிலும் புறக்கணிக்கும் செயற்பாடாகும்.**

அதுமாத்திரமன்றி இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டிருந்தமையினால் பசில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராகும் தகுதியை இழந்திருந்தார் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

"பொதுஜன பெரமுனவினால் செய்யப்பட்டிருக்கும் தேசியப் பட்டியல் நியமனத்தின் அரசியலமைப்பிற்கு அமைவான தன்மை" என்ற தலைப்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

பாராளுமன்ற உறுப்பினரான ஜயந்த கெட்டகொட இராஜினாமா செய்தமையைத் தொடர்ந்து வெற்றிடமாகியிருக்கும் தேசியப் பட்டியல் ஆசனத்திற்கு பசில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அவதானம் செலுத்தியிருக்கின்றோம்.

அரசியலமைப்பின் 99 ஏ சரத்தின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினராவதற்குத் தகுதிபெற்றவர்களின் (தேசியப் பட்டியல்) பட்டியலில் பசில் ராஜபக்ஷவின் பெயர் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

அதேபோன்று கடந்த 2020 ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் சமர்ப்பிக்கப்பட்ட மாவட்ட அடிப்படையிலான பட்டியலிலும் பசில் ராஜபக்ஷவின் பெயர் உள்ளடங்கியிருக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் பசில் ராஜபக்ஷவின் நியமனம் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. ஏனெனில் கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது, இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டிருந்தமையினால் பாராளுமன்ற உறுப்பினராகும் தகுதியை பசில் ராஜபக்ஷ இழக்க வேண்டியேற்பட்டது.

ஆகவே வெற்றிடமாகியிருக்கும் தேசியப் பட்டியல் ஆசனத்திற்கு பசில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டமையானது இலங்கை மக்களின் இறையாண்மையைப் புறக்கணிப்பதாக அமைந்திருக்கும் அதேவேளை, நாட்டின் அரசியலமைப்பையும் மீறும் செயலாகும் என்று அவ்வறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

---

இலங்கை வருபவர்களுக்கான புதிய தளர்வுகள்

# வெளிநாட்டு வாழ் இலங்கையர்கள் முன்னனுமதி பெறாது நாடு திரும்பலாம்

(கொழும்பு)

முழுமையாக இரண்டு தடுப்பூசிகளையும் போட்டுக்கொண்ட சர்வதேச பயணிகள் இலங்கை வரும்போது 14 நாட்களில் தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டிய நடைமுறை நேற்று வியாழக்கிழமை முதல் விலக்கப்பட்டுள்ளது.

இரண்டு தடுப்பூசிகளையும் போட்டுக் கொண்டவர்கள் இலங்கை வந்ததும் அவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

அதன் முடிவு வெளியாகும் வரையான ஒருநாள் அவர்கள் தனிமைப்படுத்தலில் இருந்தால் போதுமானது என திருத் தப்பட்ட புதிய வழிகாட்டலில் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, வெளிநாட்டு வாழ் இலங்கையர்கள் வெளிவிவகார அமைச்சிடம் முன் அனுமதி பெறாமலேயே இனி நாடு திரும்ப முடியும் எனவும் திருத்தப்பட்ட வழிகாட்டலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரஜைகள் மற்றும் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் தங்கள் விமானப் பயணச் சீட்டுக்களை இனி தாங்களே பதிவு செய்து கொள்ள முடியும்.

இதற்காக வெளி விவகார அமைச்சு அல்லது விமானப் போக்குவரத்து ஆணையத்தின் அனுமதிக்கு காத்திருக்க வேண்டிய தில்லை எனவும் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து இலங்கை வருவோர் அரசாங்கத்தின் தனிமைப்படுத்தல் மையங்களில் ஒரு நாளை செலவிட முடியும்.

இல்லை யேல் தனிமைப்படுத்தல் வசதியுடைய விடுதிகளை அவர்கள் தங்கள் சுய விருப்பின் பேரில் தெரிவு செய்ய முடியும்.

இதேவேளை, நாட்டுக்குள் வரும் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பி.சி.ஆர். சோதனைகளில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.

தடுப்பூசி போட்ட பயணிகள் அதற்குரிய சான்றிதழ்களை இலங்கை வரும்போது சமர்ப்பிக்க வேண்டும்.

இலங்கையிலும் பிற நாடுகளிலும் முழுமையாக தடுப்பூசி போடப் பட்டவர்களும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டுள்ளதால் நாட்டுக்குள் வருவோர் சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-5)

---


# மரண அறிவித்தல்

## அமரர்.அருணாசலம் ஜெயகுணதிலகம்

(விதானையார், முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், முன்னாள் உதயசூரியன் சனசமூக நிலையத் தலைவர், முன்னாள் முத்துமாரியம்மன் கோவில் பரிபாலனசபைத் தலைவர், முன்னாள் பாலவிநாயகர் பல்பொருள் அங்காடி உரிமையாளர், யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதி, நாச்சிக்குடா சந்தி)



பிறப்பு: 27.09.1942
இறப்பு: 07.07.2021

யாழ். மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் ஜெயகுணதிலகம் அவர்கள் 07.07.2021 புதன் கிழமை இறைபதம் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சட்டநாதபிள்ளை அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராதேவி அவர்களின் பாசமிகு கணவரும், ஜெயசாந்தி (முன்னாள் ஆசிரியை, கிளி/ முழங்காவில் மவி)- பிரான்ஸ், காண்டீபன், யசிந்தா, கங்காதீபன், தனுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதிமோகன் (பிரான்ஸ்), தேவிகா, சிவநேசன், உஷாநிதி ஆகியோரின் அன்பு மாமனாரும், மலரவன், சாருகேஷ், சரணிகா, நர்மிஷா, ஜெய்சனன், மதுமிதா (பிரான்ஸ்), வைஷ்ணவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சுவாகாதேவி மற்றும் ஜெயசோதி (சின்னராசா), சுசிலாதேவி, ராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கண்மணி, சிவபாதலிங்கம் மற்றும் சந்திரபானு ஆகியோரின் மைத்துனரும்,

பிறேமகாந்தன் (சுந்தர்), கபிலினி, சுதர்சினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பெரிய தந்தையும், பார்த்தீபன், பாண்டியன், ஜெயசுந்தரேசன் (கனடா), ஜெயகிருஷ்ணா, விஜய், கௌரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.07.2021 வியாழக்கிழமை நேற்று பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. பின்னர் பூதவுடல் மண்டைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:

ஜெயசாந்தி (மகள்)-0033641137086
கங்காதீபன் (மகன்)-0094763533307
காண்டீபன் (மகன்)-0060176571964
சந்திராதேவி (மனைவி)-0094776383924

(C-2302)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் மழை இங்கிலாந்தை நனைத்ததே முதல் முறை பைனல் கதவு திறந்ததே...

## கூடுதல் நேரத்தில் டென்மார்க்கை வீழ்த்தியது


இங்கிலாந்தின் "பைனல் கனவை நினைவாக்கிய ஹறி கேன்

யூரோ கிண்ண கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு முதன் முறையாக முன்னேறியது இங்கிலாந்து அணி. டென்மார்க் அணிக்கு எதிரான அரை யிறுதியில் கூடுதல் நேரத்தில் கோல் அடித்து வெற்றி பெற்றது.

ஐரோப்பிய அணிகளுக்கு இடையி லான யூரோ கிண்ண கால்பந்து தொடர் தற்போது நடக்கிறது.

இங்கிலாந்தின் லண்டன், வெம்ளே மைதானத்தில் நடந்த இரண்டாவது அரையிறுதியில் இங்கிலாந்து அணி, தனது சொந்த மண்ணில் டென் மார்க்கை சந்தித்தது.

போட்டியின் 30ஆவது நிமிடம் டென்மார்க் அணிக்கு 'பிரீ கிக்' வாய்ப்பு கிடைத்தது. இதில் தம்ஸ்கார்ட் அடித்த பந்து, வலைக்குள் செல்ல டென்மார்க் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

**அணித் தலைவர் சோகம்**

இந்த மகிழ்ச்சி சிறிது நேரம் கூட நீடிக்க வில்லை. போட்டியின் 39ஆவது நிமிடம் இங்கி லாந்தின் புகாயோ சகா அடித்த பந்தை வெளியே தள்ள முயன்றார் டென்மார்க் அணி கேப்டன் சைமன் கிஜயர். பந்து இவரது காலில் பட்டு வலைக்குள் செல்ல 'சேம்சைட்' கோல் ஆனது. ஸ்கோர் 1-1 என ஆனது. இரண்டாவது பாதியில் இரு அணியினரும் கோல் அடிக்கவில்லை. முடிவில் போட்டி சமனில் (1-1) முடிந்தது.

**ஹறி அபாரம்**

வெற்றியாளரை முடிவு செய்ய போட்டி கூடுதல் நேரத்துக்கு சென்றது. 104ஆவது நிமிடம் இங்கிலாந்து அணி வீரர் ஸ்டெர்லிங் 'பவுல்' செய்யப்பட்டதாக கீழே விழ, 'பெனால்டி' வாய்ப்பு கொடுத்தது சர்ச்சை கிளப்பியது. இதில் அணித் தலைவர் ஹறி கேன் அடித்த பந்தை, டென்மார்க் கோல் கீப்பர் காஸ் பர் தடுக்க ரசிகர்கள் மகிழ்ந்தனர்.

ஆனால் அவரது கையில் பட்ட பந்து வெளியே வர, அங்கி ருந்த ஹறி கேன், மறுபடியும் அடித்து பந்தை கோலாக மாற்றினார். இத்தொடரில் இவர் அடித்த நான்காவது கோல் இது.

முடிவில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, முதன் முறையாக யூரோ தொடரின் இறு திப் போட்டிக்கு முன்னேறியது. ஜூன் 11ஆம் திகதி நடக்கும் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து - இத்தாலி மோதவுள்ளன.

**10**

உலக கிண்ணம், யூரோ என முக்கிய தொடர் களில் அதிக கோல் அடித்த இங்கிலாந்து வீரர்களில் அலன் ஷியரை (9) முந்தி 'நம்பர்-1' இடத்தை ஹறி லினெகருடன் பகிர்ந்து கொண்டார் ஹறி கேன். இருவரும் தலா 10 கோல் அடித்தனர்.

**13**

யூரோ தொடரின் இறு திப் போட்டிக்கு முன்னே றிய 13ஆவது ஐரோப்பிய அணி யானது இங்கிலாந்து. கடைசியாக 2004இல் கிரீஸ், போர்த்துக்கல் அணிகள் முதன் முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

**55**

இங்கிலாந்து அணி கடைசியாக 1966இல் உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன் னேறியது. தற்போது 55 ஆண்டுக்குப் பின் முக்கிய தொட ரின் இறுதிக்குள் நுழைந்தது.

**இரண்டு பந்து**

நேற்று போட்டியின் 102ஆவது நிமிடம் இங்கிலாந்து அணி பந்தை டென்மார்க் கோல் ஏரியாவுக்குள் கொண்டு சென்றது. அப்போது அங்கு மற்றொரு பந்து கிடந்தது. இருப்பினும் போட்டி தொடர்ந்தது குழப்பத்தை ஏற்படுத்தியது.

**'லேசர்' ஒளி சர்ச்சை**

இங்கிலாந்து அணிக்கு கிடைத்த 'பெனால்டி' வாய்ப்பை ஹறி கேன் அடிக்க வந்தார்.

இதை தடுக்க தயாராக இருந்த டென்மார்க் கோல் கீப்பர் கண்ணில் எங்கிருந்தோ வந்த பச்சை நிற 'லேசர்' ஒளி விழுந்தது. இதனால் தடுமாறிய அவர் பந்தை தடுத்த போதும், பிடிக்க முடியவில்லை. இதைப் பயன்படுத்தி ஹறி கேன் கோல் அடித்து விட்டார். இதுகுறித்து ஐரோப்பிய கால்பந்து கூட்டமைப்பு விசாரணையை ஆரம்ப பிக்கவுள்ளது.

**யார் ஆதிக்கம்**

யூரோ கிண்ண இறுதிப் போட்டியில் மோதவுள்ள இங்கிலாந்து - இத்தாலி அணிகள் இதற்கு முன் 27 முறை மோதின. இதில் இங்கிலாந்து 8இல் வென்றது. 11இல் தோற்றது. 8 போட்டிகள் 'சமன்' ஆகின.




# அஞ்சலோ மத்யூஸ் விலகல்


அஞ்சலோ மத்யூஸ்

இந்தியாவுக்கு எதிரான தொடரில் இருந்து தனிப்பட்ட காரணங் களுக்காக விலகினார் அனுபவ வீரர் அஞ்சலோ மத்யூஸ்.

இலங்கை கிரிக்கெட் சபை (எஸ்.எல்.சி.,) வெளியிட்ட புதிய சம்பள ஒப்பந்தத்தை வீரர் கள் மறுத்தனர். தற்போது இலங்கை வந்துள்ள இந்திய அணி மூன்று ஒருநாள் (ஜூலை 13, 16, 18), மூன்று 'ரி20' (ஜூலை 21, 23, 25) போட்டிகள் கொண்ட தொடரில் பங் கேற்க உள்ளது.

ஆனால், சம்பள பிரச்சினை காரண மாக இலங்கை அணி விபரம் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இதனிடையே புதிய ஒப்பந்தத்தை ஏற்பதாக இலங்கை வீரர்கள் தெரி விக்க, பிரச்சினை முடி வுக்கு வந்தது. 30 பேரில் 29 பேர் ஏற்ற நிலையில், 'சீனியர்' சகலதுறை வீரர் மத்யூஸ் மட் டும் கையெழுத்திடவில்லை. இவர் தனிப்பட்ட காரணங் களுக்காக தொடரில் இருந்து விலகி விட் டார். இலங்கை கிரிக்கெட் சபை (எஸ்.எல்.சி) வெளியிட்ட அறிக்கையில், '30 பேர் கொண்ட வீரர்கள் பட்டியலில் மத்யூஸ் இடம் பெற்றிருந்தார்.

இவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அணியில் இருந்து விடுவிக் கப்பட்டார். அடுத்த அறிவிப்பு [illegible] நீடிக்கும்,' என [illegible]

# அரையிறுதியில் ஜோகோவிச் விம்பிள்டனில் வீறுநடை


ஹங்கேரியின் மார்ட்டினுடனான காலிறுதி ஆட்டத்தில் ஜோகோவிச்

விம்பிள்டன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவு அரை யிறுதிக்கு செர்பியாவின் ஜோகோவிச் முன்னேறினார்.

இங்கி லாந்தின் லண் டனில் விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் நடக் கிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி யில் உலகின் 'நம்பர்-1' செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஹங்கேரியின் மார்டன் புசோவிக்ஸ் மோதினர்.

இரண்டு மணி நேரம், 16 நிமிடம் நீடித்த போட்டியில் அசத்திய 'நடப்பு சம்பியன்' ஜோகோவிச் 6-3, 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று விம்பிள்டனில் 10ஆவது முறை யாக அரை யிறுதிக்குள் நுழைந்தார்.

தவிர, கிராண்ட்ஸ்லாம் அரங்கில் 41ஆவது முறையாக அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ள இவர், புள்வெளி ஆடு களத்தில் தனது 100ஆவது வெற் றியை பதிவு செய் தார்.

மற் றொரு காலிறுதியில் ரஷ்யாவின் கரென் கச்சா னோவ், கனடாவின் டெனிஸ் ஷபோவலோவ் மோதினர்.

மூன்று மணி நேரம், 25 நிமிடம் நீடித்த போட்டியில் ஷபோவலோவ் 6-4, 3-6, 5-7, 6-1, 6-4 என்ற செட் கணக்கில் போராடி வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சக்திமிக்க எதிர்காலத்தை நோக்கிய பயணத்தில் உதயமாகும் தேசிய ஒருமைப்பாட்டின் புதிய அத்தியாயம்

ශක්තිමත් අනාගතයක් කරා යන ගමනේ දී උදාවන ජාතික ඒකාබද්ධතාවයේ නව මංපෙත

# அனைத்து மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களின் எழுச்சிப் பிரவேசம்

සියලු ජනතාවගේ විශ්වාසයේ තරුව මුදල් අමාත්‍ය ගරු බැසිල් රාජපක්ෂ මැතිතුමාගේ සෞභාග්‍යමත් ප්‍රවේශය

சர்வதேசமே வியந்து நோக்க நீண்டகால யுத்தத்தை தனது இராஜதந்திரத்தின் மூலம் முடிவுக்குக் கொண்டு வந்தவர் அதிமேதகு மகிந்த ராஜபக்ஷ அவர்கள். நாட்டின் அபிவிருத்தியையும் இனங்களுக்கிடையே ஒற்றுமையையும் தொழில்நுட்பக் கல்வியூடாக இலகுவாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என்ற தீர்க்கதரிசனம் மிக்க உயர்ந்த சிந்தனையினால் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டவுடன் துரித அபிவிருத்தித் திட்டங்களில் எமது நாட்டில் உள்ள இளைஞர்-யுவதிகளை ஈடுபடுத்தும் நோக்குடன் இலங்கை முழுவதும் தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களை நிறுவி அனைத்து இளைஞர்-யுவதிகளும் தொழில்நுட்ப பட்டங்களைப் பெற்று அனைவர் வாழ்விலும் சுபீட்சம் பெற வைத்து நாட்டு மக்கள் அனைவர் இதயங்களிலும் தெய்வமாகப் போற்றப்படுபவர் விஷ்வகீர்த்தி அதிமேதகு மகிந்த ராஜபக்ஷ அவர்கள். நாட்டில் இடம்பெற்று வந்த கொடிய யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதும் உடனடியாக மகிந்த சிந்தனை எனும் உயர் திட்டத்தின் ஊடாக நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் புனர்நிர்மாணம். புனர்வாழ்வு என்பன துரிதகதியில் முன்னெடுக்கப் பட்டது.

நாட்டின் அபிவிருத்தியும் சமாதானமும் தொழில்நுட்பக் கல்வியூடாக எனும் திட்டத்திற்கு அமைவாக இலங்கையில் உள்ள 9 தொழில் நுட்பவியல் கல்லூரிகள் நிர்மாணிக்கப்பட்டதும் 29 தொழில்நுட்பக் கல்லூரிகளும் தரமுயர்த்தப்பட்டு நாட்டில் உள்ள இளைஞர்-யுவதிகளின் எழுச்சி மிக்க வாழ்க்கைக்கு வழி ஏற்படுத்தி அனைவர் இதயத்திலும் தெய்வமாக இடம்பிடித்தார்.


கொடிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட



வடபகுதி இளைஞர்-யுவதிகளின் வாழ்வில் ஒளியேற்றும் இரக்கம் மிகு சிந்தனையின் வெளிப்பாடாக பல விசேட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாண தொழில்நுட்பக்கல்லூரி கொரிய நாட்டின் உதவியுடன் 2.38 mill us தொழில்நுட்பவியல் கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டதுடன் தொழில்நுட்பவியல் கல்லூரிக்கு புதிய கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்டதுடன் கொரிய நாட்டில் இருந்து நவீன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பெற்றுத்தந்து இளைஞர்-யுவதிகளின் தொழில்நுட்ப தரத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்தினார்.

இன.மத பேதமின்றி அனைத்து வடபகுதி மக்களும் சர்வதேச தரத்திற்கு இணையாக தரமான இலவச வைத்திய சேவையை பெற்றுத் தருவதற்காக யாழ்ப்பாண வைத்தியசாலையில் பல அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்து வைத்து அனைவர் மனதிலும் தந்தையாக உயர்ந்தார்.



(C-2304)



நாட்டில் உள்ள அனைத்து மக்கள் மீதும் கொண்ட அளவற்ற அன்பு பாசம் காரணமாக தன்னை மட்டுமன்றி தனது குடும்பத்தினரையும் நாட்டுக்காக அர்ப்பணித்த ஒப்பற்ற தலைவர் அதிமேதகு மகிந்த ராஜபக்ஷ அவர்கள். இன்று தனது சிந்தனைகள். திட்டங்கள் என்பவற்றை விரிவுபடுத்தி இன.மத பேதமின்றி அனைத்து மக்களுக்கும் நிறைவாகக் கிடைக்க வேண்டும் என்ற உயர் நோக்குடன் மாண்புமிகு பசில் ராஜபக்ஷ அவர்களை நாட்டு மக்களுக்காக புதிய பொலிவுடன் நியமிக்கின்றார். இப்படிப்பட்ட அன்புமிக்க தந்தை போன்ற தலைவர் எமக்குக் கிடைத்தது நாட்டு மக்களாகிய நாம் பெற்ற பாக்கியமாகும்.




வடக்கின் வசந்தத்தில் கிரவாபத்துவவில் இருந்து வடக்கிற்கு

උතුරු වසන්තයේ දී ගිරවාපත්තුවෙන් තල් අරණට

இன்று வடக்கில் இருந்து கிரவாபத்துவவிற்கு

අද තල් අරණෙන් ගිරවාපත්තුවට

## வடக்கில் இருந்து நல்வாழ்த்துக்கள்

## තල් අරණෙන් සුබ පැතුම්



கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற கொடிய யுத்தத்தினால் தம் வாழ்க்கையை தொலைத்து நிற்கும் இளைஞர்-யுவதிகளின் வாழ்வில் ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்தும் நம்பிக்கையின் நட்சத்திரம் மாண்புமிகு நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களின் விஸ்வரூப அரசியல் பிரவேசம் இலங்கை அரசியல் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் எழுதப்படும் புதிய சரித்திரத்தை படைக்கின்றது. நாட்டில் உள்ள அனைத்து இளைஞர்-யுவதிகளுக்கு தொழில்நுட்ப கல்வியூடாக யுத்தத்தினால் சிதைந்து போன நாட்டை துரிதகதியில் கட்டியெழுப்பும் செயற்றிட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்த காலத்தில் இருந்தே பெருவெற்றி பெற்றவர். அனைத்து மக்களின் அன்புமிக்க தலைவராக திகழ்ந்தவர். அரசியல் சாணக்கியம் மிக்க பசில் ராஜபக்ஷ அவர்கள் நாட்டில் உள்ள இளைஞர்-யுவதிகளுக்கான புதிய தொழில்நுட்ப பயிற்சிகள் பலவற்றை பயிற்றுவதன் மூலம் எமது நாட்டில் உயர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்று நாட்டின் அபிவிருத்திக்கு தம்மை அர்ப்பணிப்பது மட்டுமன்றி வெளிநாட்டு செலாவணியை எமது நாட்டிற்கு ஈட்டிக் கொடுக்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் மூலம் இளைஞர்-யுவதிகள் வாழ்வில் ஒளி ஏற்றி வைத்து வெற்றி கண்ட பெருமைக்கு உரியவரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக நாட்டிற்கு மிகப் பெரும் சேவையாற்றியவரும் ஆவார்.

யுத்தத்தினால் தமது கல்வி மற்றும் வாழ்க்கைகளைத் தொலைத்து நின்ற எமது வடபகுதி இளைஞர்-யுவதிகளின் வாழ்வில் ஒளி ஏற்றி வைப்பதற்கு மாண்புமிகு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களின் உயர் சிந்தையுள் உதித்த திட்டமே வடக்கின் வசந்தம் எனும் வடபகுதி வரலாற்றின் புதிய திட்டமாகும்.

யுத்தத்தினால் தமது கல்வி மற்றும் வாழ்க்கையைத் தொலைத்து நின்ற எமது வடபகுதி இளைஞர்-யுவதிகளைத் திரட்டி அனைவருக்கும் குறுகிய கால தொழில் பயிற்சியை அளித்து யுத்தத்தினால் சிதைந்து போன வடபகுதியை துரிதகதியில் கட்டியெழுப்பும் பணிகளில் அவர்களை ஈடுபடுத்தி வெற்றி கண்டவர் வடக்கின் வசந்தத்தின் சிந்தனைச்சிற்பி பசில் ராஜபக்ஷ அவர்கள். கொடிய யுத்தத்தினால் தமது வாழ்வை தொலைத்து நின்ற இளைஞர்-யுவதிகள் 7000 பேருக்கு மின் இணைத்தல். வெல்டிங். நீர்க்குழாய் இணைத்தல். கட்டட வேலை என்பவற்றில் குறுகிய கால பயிற்சியை தொழில்நுட்பக்கல்லூரியில் பயிற்றுவித்து அனைவரையும் நாட்டின் அபிவிருத்திகளில் ஈடுபடுத்தி வெற்றி கண்டவர் மாண்புமிகு பசில் ராஜபக்ஷ அவர்கள்.

வடக்கின் வசந்தம் எனும் செயற்றிட்டத்தின் கீழ் வடபகுதி மண்ணில் ஓர் புதிய சரித்திரம் 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி படைக்கப்பட்டது. கொரிய நாட்டின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட புதிய தொழில்நுட்பவியல் கல்லூரி வடக்கின் வசந்தத்தின் நாயகன் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களினால் வடபகுதி இளைஞர்-யுவதிகளுக்காக திறந்து வைக்கப்பட்டது. இப்புதிய கட்டடம் யாழ்ப்பாணத்து இளைஞர்-யுவதிகளுக்கு கையளிக்கும் நிகழ்வில் மாண்புமிகு இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் அமைச்சர் டளஸ் அழகப்பெரும மற்றும் இத்திட்டத்தை யாழ்ப்பாண மக்களுக்கு பெற்றுத் தருவதற்கு மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்த. கௌரவ ஆளுநர் சந்திரசிறி. கௌரவ அங்கஜன் இராமநாதன். விழாவில் கலந்து சிறப்பித்த கௌரவ பா.உ.மாவை சேனாதிராஜா. பா.உ.ஈ.சரவணபவன். சந்திரகுமார் ஆகியோர். மீண்டும் நிதி அமைச்சராக விஸ்வரூபமெடுக்கும் மாண்புமிகு பசில் ராஜபக்ஷ அவர்களின் புதிய பிரவேசம் வடபகுதி அனைத்து இளைஞர்-யுவதிகளின் வாழ்வில் ஒளியேற்றி வைக்கும் அதிநவீன வடக்கின் வசந்தம் போன்ற புதிய வடிவம் அனைவருக்கும் தொழில் கல்விப்பட்டங்கள். வெளிநாட்டு வேலைவாய்ப்பு. உள்நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் பங்காற்றி நாட்டை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள். வெளிநாட்டு செலாவணியை எமது நாட்டுக்கு ஈட்டித்தரும் பணிகளில் அமர்த்துதல் போன்ற புதிய ஒளிமயமான காலத்தை ஏற்படுத்துவார் என்பது அனைத்து மக்கள் மத்தியிலும் அசைக்க முடியாத நம்பிக்கை ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது.

## அனைத்து இளைஞர்-யுவதிகளின் சகல வளங்களும் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு

வடக்கின் வசந்தம் நாயகன் கௌரவ நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களின் தொழில்நுட்பக்கல்வி ஊடாக நாட்டில் சமாதானமும் அபிவிருத்தியும் என்ற கொள்கைக்கு ஏற்ப வடபகுதியில் உள்ள இளைஞர்-யுவதிகளின் வாழ்வை மேம்படுத்தும் திட்டங்களிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அங்கவீனமான இலங்கையில் உள்ள அனைத்து இளைஞர்-யுவதிகளின் திறன்களை வீணாக்காது நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில் இணைப்பதற்கு ஜப்பான். கொரியா போன்ற நாடுகளின் முன்மாதிரியை இலங்கையிலும் நடைமுறைப்படுத்தி நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்கும் நவீன உலகத்திற்கே முன்மாதிரியான எழுச்சிமிக்க புதிய திட்டங்களை மாண்புமிகு பசில் ராஜபக்ஷ முன்னெடுக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



நன்றி
என்றும் அன்புடன் உங்கள்
கலாநிதி ந.யோகராஜன்
கிரவாபத்துவவில் இருந்து தல் அறணட்ட அமைப்பின்
மாவட்ட இணைப்பாளர்-யாழ்.மாவட்ட அமைப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்ட பயனாளிகளின் விபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டது

(சாவகச்சேரி)


**தென்மராட்சி பிரதேசத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான வீட்டுத் திட்டப் பயனாளிகளாக பிரதேச செயலகத்தால் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் நேற்று வியாழக்கிழமை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.**

இந்நிலையில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 60 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இருந்தும் மொத்தமாக 164 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பயனாளிகளின் பெயர் மற்றும் குடும்ப விபரங்களுடன் பயனாளியாகத் தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

வன்னியில் இருந்து வந்து மீளக் குடியமர்ந்தவர்கள், யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பம் ஆகியன புள்ளி அடிப்படையில் முன்னிலைப்படுத்தப்பட்டு பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7-6-30)

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பேராசிரியரான முதலாவது தமிழர்



(யாழ்ப்பாணம்)

தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக முதலாவது தமிழராக முகாமைத்தவ பீட பீடாதிபதி கலாநிதி செல்வரெத்தினம் குணபாலன் தெரிவாகியுள்ளார்.

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த காரைதீவைச் சேர்ந்த செல்வரெத்தினம் பொன்னம்மா தம்பதியினரின் புதல்வரான இவர் தற்சமயம் தம்பிலுவிலில் வாழ்ந்து வருகிறார்.

நேற்று முன்தினம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக தெரிவான ஐந்து பேரில் கலாநிதி குணபாலன் ஒருவராவார். பல்கலைக்கழகத்தில் 20 வருட விரிவுரையாளர் சேவையைக் கொண்டவர்.

இவர் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆரம்ப கால விரிவுரையாளர்களில் ஒருவராவார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4-7)

# மீளக்குடியமராத குடும்பங்களின் விபரங்கள் மீளாய்வு

## யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வசிக்கும் குடும்பங்களின் விபரங்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன. பல்வேறு பிரதேசங்கள் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் எஞ்சிய மீளக்குடியமராத குடும்பங்களின் விபரங்கள் அவர்கள் தற்போது வசிக்கும் பிரதேச செயலாளர்களினால் இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றன.

எனவே இதுவரை இடம்பெயர்ந்து மீளக்குடியமராத மக்கள் தாங்கள் தற்போது வசிக்கும் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு தங்களுடைய பெயர் குறிக்கப்பட்ட பட்டியலில் உள்ளதா? என்பதனை உறுதிப்படுத்துமாறு அரசாங்க அதிபர் க.மகேசன் அறிவித்துள்ளார். (4-7-6-33)





# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யா/மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம், யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை ஆகிய பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக வட மாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது வலயக் கல்வி அலுவலகங்களில் இருந்து விண்ணப்பங்களைப் பெற்று வலயக் கல்வி பணிப்பாளரின் சிபாரிசுடன் 22.07.2021 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி பணிப்பாளர் வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி, சாவகச்சேரி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (4-7)



**சாவகச்சேரி பிரதேச சபைக்கு உரித்தான மந்துவில் வடக்கு கேரத்து குள வீதியில் பாலம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் நேற்று வியாழக்கிழமை காலை இடம் பெற்றது.**

(படம்:-சுபேசன்)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் தென்மராட்சி சங்கத்தானை வைரவ சுவாமி கந்தசுவாமி கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ தே.கௌரி சங்கரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-6)

# மீசாலை அடிதடி சம்பவத்துடன் தொடர்புடைய ஏழு பேர் கைது

(சாவகச்சேரி)

தென்மராட்சி மீசாலைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற அடிதடிச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏழு பேரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இருப்பினும் குறித்த அடிதடிச் சம்பவம் மீசாலையில் ஆசிரியை வீட்டில் திருட்டு என்ற கோணத்தில் திசை திருப்பப்பட்டிருப்பதாகவும் அவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் எவையும் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குள் இடம்பெறவில்லை எனவும் அவை தொடர்பான முறைப்பாடுகள் எவையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துவரப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (4-7-6-30)

# திருட்டில் ஈடுபட்டவர் பிடிபட்டார்

(கரணவாய்)

நெல்லியடி நகரப் பகுதியில் உள்ள மருந்தகத்தை உடைத்து திருடிய இளைஞர் நெல்லியடி பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை 4 மணியளவில் நெல்லியடி நகர் கொடிகாமம் வீதியில் உள்ள மருந்தகம் ஒன்று உடைக்கப்பட்டு திருட்டு இடம்பெற்றிருந்தது. திருடிய நபர் தொடர்பான ஒளிப்படம் சி.சி.ரி.வி கமரா மூலம் இனங்காணப்பட்டு வெளியிடப்பட்ட நிலையில் நேற்றைய தினம் திருடன் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இளைஞர் கரவெட்டி காட்டுப்புலம் பகுதியைச் சேர்ந்த 19 வயதான இளைஞர் என பொலிஸார் தெரிவித்தனர். (4-7-6-60)

# அல்லைப்பிட்டியில் 6.5 கிலோ கேரளக் கஞ்சா மீட்பு

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் முச்சக்கர வண்டியில் 6.5 கிலோ கேரளக் கஞ்சாவை கடத்திச் சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை - அல்லைப்பிட்டியில் நேற்று பிற்பகல் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து 3 பொதிகளில் 6 கிலோ 500 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

அல்லைப்பிட்டி 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவரிடம் கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் முச்சக்கர வண்டியும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (4-7-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி 021 221 7603,
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532

# சித்த ஆயுர்வேத நிபுணர்களின் ஆலோசனையும் சிகிச்சையும்

யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக சித்த ஆயுர்வேத நிபுணர்களின் ஆலோசனைகள் ம்ற்றும் சிகிச்சைகளை மக்களுக்கு வழங்கவிருக்கிறோம்.

பொது மருத்துவம், குழந்தை மருத்துவம், சித்த ஆயுர்வேத அறுவை மருத்துவமும் வர்ம சிகிச்சையும், பஞ்சகர்ம சிகிச்சை, உணவுப் போசணை, காயகல்ப மற்றும் யோகா போன்றவற்றில் நிபுணத்துவமுள்ளவர்களினால் சிகிச்சைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

முதலில் திங்கள் பி.ப.2.30-4.00 வரை (12.07.2021) அன்று முள்ளந்தண்டுப் பிரச்சினை, மூட்டுக்களில் ஏற்பட்ட பாதிப்பு, முழங்கால் நடக்க முடியாமை (10 நாட்களில் தீர்வு), முறிவுநெறிவு, பிஸ்ரியலா, மாறாத புண்கள், சிறுநீரகக் கற்கள், மாறாத சர்மநோய்கள், மூல வியாதிகள் போன்றவற்றிற்கு ஆயுர்வேத சத்திரசிகிச்சை, வர்ம நிபுணர் **Dr. G.Sritharan BSMS (Jaf) M. Phil (Jaf), PGDAS (Kelany), Ad. Dip.In. Human Exe & Yoga (Aliyaru) & Phd (india)** அவர்களால் பார்வையிடப்படவுள்ளது.

அடுத்து உணவும் போசணை மருத்துவ நிபுணர் **Dr. T. Theleepan BSMS (Jaf), M.Sc (Pera)** அவர்களால் இருதய வியாதி, நீரிழிவு வியாதி, போசாக்கின்மை, இளநரை, உடல் நிறையைக் குறைத்தல் போன்றவற்றுக்கு ஆலோசனையும் சிகிச்சையும் வழங்கவுள்ளார். தொடர்ந்து ஏனைய நிபுணத்துவ சிகிச்சையும் நடைபெறவுள்ளது.

இடம்: ஆயுர்வேத வைத்தியசாலை கைதடிக்கு முன்பாக உள்ள கனி மெடி கிளினிக்கில் நடைபெறவுள்ளது.

**தொடர்புகளுக்கு: நிர்வாக இயக்குநர்**
**077 438 2374, 077 926 8850**

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா:79 ¼செவ் 12 சூரி 11 இல்
உயரம்:5'3"
தகைமை/ தொழில்: தபால் அரசஊழியர்
எதிர்பார்ப்பு:அரசதொழில் விரும்பத்தக்கது.
தொ.இ: B/1850

பிறப்பு:1988 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 49 ¼செவ் 11 சூரி 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:பொலிஸ் உத்தியோகம்
எதிர்பார்ப்பு: வெளிநாடும்உள்நாடும்பார்க்கலாம்
தொ.இ: B/1865

பிறப்பு:1981 இந்து
நட்சத்திரம்:சதயம்
கி.பா:15 ¼ செவ் 10 சூரி 11 இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்: நிரந்தர ஆசிரியர்
எதிர்பார்ப்பு:படித்தபெண்
தொ.இ: B/1872

பிறப்பு:1987 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 46 ¼செவ் 1 சூரி 12இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:கடற்தொழில்
எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
தொ.இ: B/1888

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1984 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 5 ¾செவ் 10 சூரி5 இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: கணக்காளர் (கனடா PR உண்டு)
எதிர்பார்ப்பு:வெளிநாடு.உள்நாடு
தொ.இ:G/5390

பிறப்பு:1987கிறிஸ்தவம்
நட்சத்திரம்:உத்தரட்டாதி
கி.பா:17 ¼ செவ் 10 சூரி9 இல்
உயரம்:158cm
தகைமை/தொழில்: ஆராய்ச்சி உத்தியோகத்தர். B.Sc,M.Sc
எதிர்பார்ப்பு:கனடா.அவுஸ்திரேலியா.உள்ளூர்
தொ.இ:G/5391

பிறப்பு:1977இந்து நட்சத்திரம்: சுவாதி
கி.பா:23 செவ்9 சூரி10 இல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்: சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:எழுத்துடன் விவாகரத்து பெற்றவர் விரும்பத்தக்கது
தொ.இ:G/5404

பிறப்பு: 1987இந்து நட்சத்திரம்:அத்தம்
கி.பா:25 செவ்.சூரி12 இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்:B.Sc,M.Sc
எதிர்பார்ப்பு:பொறியிலாளர், வைத்தியர், வெளிநாடு-அவுஸ்திரேலியா, லண்டன், கனடா
தொ.இ:G/5406

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைபேசி
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

# பசிலின் பதவியேற்பை புறக்கணித்த மூவர்

(கொழும்பு)

நிதியமைச்சராக பதவியேற்ற பின்னர் பாராளுமன்றம் வருகை தந்த பசில் ராஜபக்ஷ சபாநாயகர் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்தார்.

இந்த நிகழ்வை ஆளும்கட்சியைச் சேர்ந்த இரண்டு அமைச்சர்கள் மற்றும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பகிஷ்கரித்துள்ளமை பற்றிய தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி அமைச்சர்களான விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார மற்றும் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ ஆகியோர் சபையில் இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அமைச்சர் உதய கம்மன்பில சபா மண்டபத்தில் இருந்துள்ளார். இதேவேளை குறித்த அமைச்சர்களும் உறுப்பினரும் 20ஆவது திருத்தத்திற்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதனப் பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம்:10. முருகமூர்த்தி கோயில் ஒழுங்கை. 55/4 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் கார்த்திகேசு cl/by:- இந்துராஜா என்னும் பெயரில் ஆதனவரிப் பெயரேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை சாவகச்சேரி வடக்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளையும் பெண் திலகவதிப்பிள்ளையும் பிரசித்த நொத்தாரிசு வழக்கறிஞர் கதிர்காமசேகரன் முகதாவில் 1968.12.09 ஆம் திகதியிடப்பட்ட 13577 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிமூலம் அவ்வூர் வேலுப்பிள்ளை இராசரத்தினம் என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

பின்னர் சாவகச்சேரி வடக்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளையும் பெண் திலகவதிப்பிள்ளையும் வேலுப்பிள்ளை இராசரத்தினமும் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு வல்லிபுரம் சின்னையா முகதாவில் நிறைவேறிய 1987.03.08 ஆம் திகதியிடப்பட்ட 1458 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் சாவகச்சேரி வடக்கு முருகன் கோவிலடி நடராசா இந்துராசாவுக்கும் பெண் இராசேஸ்வரிக்கும் அறுதியாக வழங்கியுள்ளனர்.

சாவகச்சேரி வடக்கு முருகன் கோவிலடி நடராசா இந்துராசாவும் பெண் இராசேஸ்வரியும் பிரசித்த நொத்தாரிசு வல்லிபுரம் சின்னையா முகதாவில் நிறைவேறிய 1988.08.29 ஆம் திகதி திகதியிடப்பட்ட 1555 இலக்க அறுதி உறுதி மூலம் வேலுப்பிள்ளை இராசரத்தினத்துக்கு அறுதியாக வழங்கியுள்ளனர்.

பின்னர் சாவகச்சேரி வடக்கு வேலுப்பிள்ளை இராசரத்தினமும் பெண் சிவபாக்கியமும் பிரசித்த நொத்தாரிசு வல்லிபுரம் சின்னையா முகதாவில் 1990.03.05 ஆம் திகதி திகதியிடப்பட்ட 1659 இலக்க அறுதி உறுதி மூலம்நடராசா இந்துராசாவும் பெண் இராசேஸ்வரிக்கும் அறுதியாக வழங்கியுள்ளனர்.

ஆதனவிபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சி பகுதி சாவகச்சேரி கோயிற்பற்று சாவகச்சேரி இறை " சங்கம் சீமாவளவு கொட்சாட்டி" நிலப்பரப்பு மூன்று (03). இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் **V.A.** தங்கமயில் அவர்களால் 04.08.2020 ஆம் திகதியில் அளந்து வரைந்த 5682 ஆம் இலக்க வரைபடத்தின்படி நிலப்பரப்பு 3 குளி 09.80. இதற்கு எல்லை.

வடக்கு: தம்பையா குருக்கள் வீரபத்திரக்குருக்களுக்கும் மறுபேருக்குரிய ஆதனம்
கிழக்கு: பேரம்பலம் பெண் கனகம்மாவுக்குரிய ஆதனம்
தெற்கு: விஸ்வலிங்கம் பூரணத்திற்குரிய ஆதனம்
மேற்கு: வேலுப்பிள்ளை மகேஸ்வரனுக்குரிய ஆதனம்

தற்போது நடராசா இந்துராசாவும் பெண் இராசேஸ்வரியும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவமங்கை இராமநாதன்
தவிசாளர், நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

(7155)

# மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்



திருமதி. **விஜயஸ்ரீ சரவணபவானந்தன்**
பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர் (S.L.T.S.I)
(யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி)

**ஆசிரியர் சேவை விபரம்**
நு/ சென்.மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயம், ஹற்றன்
05.08.1985-31.12.1987
ஆசிரியர் பயிற்சி கலாசாலை, பலாலி
01.01.1988-31.12.1989
நு/ சென்.மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயம், ஹற்றன்
01.01.1990-02.03.1992
யா/ அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி
03.03.1992-31.12.1995
கிளி/ வட்டக்கச்சி மகா வித்தியாலயம்
01.01.1996-13.01.1997
கிளி/ பிரமந்தனாறு மகா வித்தியாலயம்
14.01.1997-31.09.1997
யா/ சென்.திரேசா மகளிர் கல்லூரி, அச்சுவேலி
01.10.1997-09.09.2001
யா/ நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை
10.09.2001-15.06.2010
யா/ அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி
16.06.2010-08.07.2021

ஆசிரியப் பணியை அர்ப்பணிப்புடன் நிறைவேற்றி இன்று ஓய்வு பெறும் மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்.

(7153)

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/ அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்திற்கு பணிப்பாளர் நியமனம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராக இரத்தினம் தமிழ்மாறன, நேற்று முன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

முல்லை வலயத்திற்கு புதிய வலயக் கல்விப் பணிப்பாளர் கடந்த வாரத்திற்கு முன்னர் வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டபோதும் தனது பதவியினை பொறுப்பேற்பதில் மூன்று மாதங்கள் காலக்கெடு கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையில் வடமாகாண ஆளுநர் உடனடியாக பதவியினைப் பொறுப்பேற்குமாறு பணித்ததற்கு அமைய இரத்தினம் தமிழ்மாறன் கடமைகளை நேற்று முன்தினம் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(7-4-281)

## சுகாதார அமைச்சிற்கு பி.சி.ஆர். இயந்திரம் அன்பளிப்பு

(அக்கராயன்)

முழு நாடும் கொரானாவிற்கு எதிராக போராடும் தற்போதைய காலகட்டத்தில் தமது சமூகப் பொறுப்பினை உணர்ந்து எஸ்.ரி.எஸ். அருளானந்தன் (தலைவர், இலங்கை கட்டடப் பொருள் வணிகர் கழகம்) மற்றும் இணைப்பாளர் எஸ். சண்முகநாதன் ஆகியோர் எடுத்த முன் முயற்சியை அடுத்து இலங்கை கட்டடப் பொருள் வணிகர் கழகத்தினரால் ஆறு மில்லியன் பெறுமதியான பி.சி.ஆர். இயந்திரம் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டது. நேற்று முன்தினம் சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் முனசிங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன ஆகியோரிடம் பி.சி.ஆர்.இயந்திரமானது உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

(7-4-350)



SLT மொபிட்டல் நிறுவனத்தின் "சமூக பொறுப்பு" செயற்திட்டத்தின் கீழ் கொரோன தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட தேவையுடைய குடும்பங்களுக்கான அத்தியாவசிய நிவாரண பொருட்கள் வழங்கும் நிகழ்வு மன்னார் நகர் பிரதேச செயலகம் மற்றும் SLTமொபிட்டல் நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் இடம் பெற்றது. உதயபுரம் மற்றும் சிறுதோப்பு பகுதிகளை சேர்ந்த சுமார் 50 குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (படம்: ஜோசப் நயன்)

## கிளிநொச்சியில் ஆசிரியர்களுக்கு நேற்று முதல் தடுப்பூசி



(முறிகண்டி)

ஆசிரியர்களிற்கும் தடுப்பூசி ஏற்றும் பணிகள் கிளிநொச்சியில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், சாந்தபுரம் இராணுவ வைத்தியசாலை, பூநகரி உள்ளிட்ட பகுதிகளில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம் பெற்று வரும் நிலையில், நேற்று முதல் ஆசிரியர்களிற்கான தடுப்பூசி ஏற்றும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் உண்ணாபுலவு ஆதார வைத்தியசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(4-7-100-281- 316)

# அனைத்து வசதிகளும் செய்துதரப்படும்

# அச்சமின்றி தடுப்பூசி பெற்றுக்கொள்ளுங்கள்

## கிளி. சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(முறிகண்டி)

**கிராம எல்லையிலுள்ள மக்களிற்கும் தடுப்பூசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் படுக்கையில் உள்ள நோயாளர்களையும் அழைத்து நோயாளர் காவு வண்டியில் ஏற்றி தடுப்பூசி வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. எனவே அச்சமின்றி தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுங்கள் என கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே தெரிவித்தார். அதேவேளை முன்னிலைகளப்பணியாளர்கள், வர்த்தகர்கள் உள்ளிடடோருக்கும் தடுப்பூசி வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தடுப்பூசி 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு கடந்த திங்கள் தொடக்கம் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை பக்க விளைவுகள்ஏற்பட்டதாக முறைப்பாடுகள் கிடைக்கவில்லை. இந்த நிலையில் மக்கள் அனைவரும் இதனை முன்னுதாரணமாகக் கொண்டு தடுப்பூசியை பெற்றுக்கொண்டு நோய் பரவலை கட்டுப்படுத்த எமக்கு உதவ வேண்டும் எனத் தெரிவித்தார்.

மேலும் அடுத்தகட்ட தடுப்பூசி எதிர்வரும் 12ஆம் திகதியளவில் கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். கிடைத்தவுடன் பிரதேச வைத்தியசாலை, தள வைத்தியசாலை, பொது வைத்தியசாலை மற்றும் தூர இடங்களில் உள்ளவர்களிற்கு பொது இடங்களிலே தடுப்பூசியை ஏற்றுவதற்கு ஏற்பாடு செய்துள்ளோம். இங்கு தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்கள் அருகில் உள்ள நிலையங்களில் வந்து தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும்.

குறித்த பகுதிகளில் தடுப்பூசி ஏற்றப்படும்போது அறிவிக்கப்படும். அப்பிரதேசங்களில் உள்ள மக்கள்வரும்போது உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அடையாள அட்டையையும் கொண்டு வர வேண்டும். அதே வேளை இந்த மாவட்டத்தில் நீண்ட காலமாக தற்காலிகமாக வந்து தங்கியுள்ளவர்களும் தடுப்பூசியை இங்கு பெற்றுக்கொள்ளலாம். அதன்போது பிரதேசத்திற்கு பொறுப்பாக உள்ள கிராம உத்தியோகத்தரை தொடர்புகொண்டு உறுதிப்படுத்தி அதனை பெற்றுக் கொள்ளலாம். முல்லைத்தீவு, மற்றும்மன்னார் மாவட்டத்தின் எல்லை கிராம மக்கள் தூர வசதியை கருத்தில் கொண்டு எமது மாவட்ட வைத்திய சாலைகளில் சேவைகளை பெற்றக்கொள்வது வழமை. அவர்களிற்கு தடுப்பூசி ஏற்றுவதற்கு முன்னனுமதியை பெற்றுக் கொண்டு அவர்களிற்கான ஒழுங்குகளையும் செய்யலாம் என்று நாங்கள் யோசித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7-4-100)

## வவு. மக்கள் தடுப்பூசியில் அதிக ஆர்வம்

# கிடைக்கப்பெற்ற தடுப்பூசியைவிட வருகை தந்த மக்கள் அதிகம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டின் முதற்கட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வைத்திய உயர் அதிகாரிகள் சிலரின் முயற்சியால் வவுனியா மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிஏற்றுவதற்காக ஆயிரம் தடுப்பூசிகள் வன்னி பிராந்திய இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் ஹேமந்த பண்டாரவின் ஒத்துழைப்புடன் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த தடுப்பூசிகள் நேற்று முன்தினம் வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் வைத்து நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்றப்பட்டிருந்தது.

இது தொடர்பில் தடுப்பூசி பெறுவதற்காக வருகை தந்தவர்கள் கருத்து தெரிவிக்கையில், வயதான எமக்கு தடுப்பூசியை பெற மிகவும் சிறப்பான ஏற்பாடுகளை சுகாதார தரப்பினர் ஏற்பாடு செய்திருந்தனர். எவருக்கும் முன்னுரிமை வழங்காமல் அனைத்து வயதானவர்களையும் ஒரே மாதிரியாக கவனித்து தடுப்பூசிகளை வழங்கியிருந்தனர்.

இந்நிலையில் ஆயிரம் பேருக்கான தடுப்பூசிகள் நேற்று முன்தினம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் சுமார் 25 பேர் அதிகமாக வருகை தந்தமையினால் அவர்களை திருப்பி அனுப்பாமல் வவுனியா வைத்தியசாலையில் இருந்து 25 பேருக்குமான தடுப்பூசிகள் வழங்கப்பட்டு அவர்களுக்கு ஏற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (7-4-299)

# பொன்னாவெளி பாடசாலையினை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரியில் மூடப்பட்டுள்ள பொன்னாவெளி பாடசாலையினை மீள இயக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டிற்குப் பின்னர் இப்பாடசாலை மூடப்பட்டுள்ளது. மூடப்பட்டுள்ள பாடசாலையினை கிராஞ்சிக்கும் வேரவிலுக்கும் இடையில் உள்ள சிவபுரம் கிராமத்தில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கையினை கிளிநொச்சி வலயம் மேற்கொள்ள வேண்டும் எனவும் இப்பகுதி மக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உவர்பரம்பல் காரணமாக பொன்னாவெளிக் கிராமத்தில் இருந்த பாடசாலை மூடப்பட்டது. இப்பாடசாலையினை 2010 ஆம் ஆண்டில் இருந்து சிவபுரத்தில் இயங்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை கைகூடவில்லை.

சிவபுரம் கிராமத்தில் 630 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் ஆரம்பப் பாடசாலையான பொன்னாவெளி பாடசாலையினை சிவபுரத்தில் இயங்க வைப்பதன் மூலம் மாணவர்கள் பெரும் நன்மையடைவார்கள்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் எட்டு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. பூநகரி கல்விக் கோட்டத்தில் மட்டும் ஆறு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(7-4-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

09.07.2021
ஆனி 25, வெள்ளிக்கிழமை
அமாவாசை முழுவதும்
திருவாதிரை பின்னிரவு 12.09 மணிவரை
சுபநேரம் 5.58-7.28 மணிவரை
இராகுகாலம் 10.28-11.58 மணிவரை
சந்திராஷ்டமம்: அனுசம், கேட்டை
அமாவாசை விரதம்

வளவன்

**மேஷம்** — நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** — வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வாய்ப்புகள் உங்களை நாடி வரலாம்.

**மிதுனம்** — இல்லத்திலும், உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**கடகம்** — எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொழில் சம்பந்தமான பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** — பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி** — அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வருவர், கனவு பலிதமுண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** — பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** — சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள், வரவும், செலவும் சமமாகும் நாள்.

**தனுசு** — குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** — உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், கடன் பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு.

**கும்பம்** — வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மீனம்** — தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவு கிடைக்கும் வாய்ப்புண்டு, உடல் நலன் சீராகும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

செலவழித்து நிம்மதியாயிரு, ஆனால் வீணாக்காதே

# வனவள திணைக்களத்தின் பிடியில் உள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

**வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களங்களினால் கட்டுப்படுத் தப்பட்டுள்ள விவசாய நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.**

வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்கவுடனான சந்திப்பின் போதே கடற்றொழில் அமைச்சரினால் குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

வனஜீவராசிகள் அமைச்சில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சந்திப்பின்போது, வடக்கு மாகாணத்தில் தற்போது வனத் துறையினரினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளில், யுத்தத்திற்கு முற்பட்ட காலப் பகுதியில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, துறைசார் அமைச்சர் சி.பி. ரத்நாயக்கவிற்கு தெளிவுபடுத்தினார்.

அத்துடன், குறித்த காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வடக்கு விவசாயிகள் ஆர்வமாக இருப்பதனையும் சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சம்பந்தப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்பட்டு விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில், அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்தினையும் வலுப்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் வனப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியிருந்த அமைச்சர் அவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டுள்ள காணிகளில் நீர் வேளாண்மை பண்ணைகளை அமைப்பதற்கு பொருத்தமான இடங்களை விடுவித்து பயன்படுத்திக் கொள்வது தொடர்பாக கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-4)

# முகமாலை பகுதியில் வாள்வெட்டு

## -இருவர் படுகாயம்-

(முறிகண்டி)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட முகமாலை பகுதியில் நேற்று முன்தினம் 11 மணியளவில் வீட்டிற்குள் புகுந்த வாள் வெட்டுக் கும்பல் தொலைக் காட்சி பார்த்துக்கொண்டு இருந்த குடும்பத் தலைவரை வெட்டியுள்ளது.


இதனால் கை, கால் மற்றும் முதுகுப் பகுதியில் வெட்டப்பட்டு காயமடைந்துள்ளார். குறித்த நபர் பளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வீட்டில் வாய் பேச முடியாத நிலையில் இருந்த நபருக்கும் அடிகாயங்கள் ஏற்பட்டுள்ளன. வீட்டில் இருந்த தொலைக் காட்சி, அலுமாரி உள்ளிட்ட பொருட்களும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வீட்டின் பிரதான வாயிலில் காணப்பட்ட கதவும் வாளினால் வெட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விரைந்து செயற்பட்ட முகமாலை இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமைகளை அவதானித்தமையும் குறிப்பிடத்தக்கது. (7-4-100-316)

# 672 கிலோ உலர்ந்த மஞ்சள் மன்னார் பகுதியில் மீட்பு



(மன்னார்)

சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட ஒரு தொகுதி உலர்ந்த மஞ்சள் மூடைகளை நேற்று வியாழக்கிழமை அதிகாலை மன்னார் பெரியகடை கடற்கரை கலப்பு பகுதியில் வைத்து இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

மன்னார் இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட இராணுவத்தினர் 18 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 672 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மூடைகளை கைப்பற்றினர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய வள்ளங்கள் 3 மற்றும் பட்டா ரக வாகனமும் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டது. சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர். குறித்த பொருட்கள் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதோடு குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (7-4-285)

# பசிலுக்கு வடக்கிலும் வரவேற்பு



(மன்னார்)

பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ நிதி அமைச்சராக பதவியேற்றதையடுத்து பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர்களால் வவுனியா பேருந்து நிலையத்தின் முன்பாகவும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகரப் பகுதியிலும், மன்னார் பிரதான சுற்று வட்ட பகுதியிலும் வெடி கொளுத்தியும் இனிப்பு வழங்கியும் கொண்டாடப்பட்டது.

(7-4-250-281-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## காஷ்மீரின் வெவ்வேறு பகுதிகளில் 5 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை



(டில்லி)

காஷ்மீரின் வெவ்வேறு பகுதிகளில் பாதுகாப்பு படையினர் நடத்திய தாக்குதலில் 5 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குல்காம் மாவட்டத்தின் ஷோடர் என்ற இடத்தில் லக்ஷர் இ தொய்பா அமைப்பைச் சேர்ந்த இரு தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

அதேபோல் காஷ்மீர் பகுதியில் பாதுகாப்புப் படையினர் நடத்திய சோதனையின்போது மற்றுமொரு தீவிரவாதியும் கொல்லப்பட்டுள்ளார்.

அதேநேரம் புல்வாமாவின் புசால் என்ற இடத்தில் பதுங்கியிருந்த ஒரு தீவிரவாதியும் மேலும் ஒரு தீவிரவாதி நேற்று முன்தினம் மாலையும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதனையடுத்தே 5 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (8-7)

## மக்களைத் தேடி மருத்துவம் விரைவில் துவங்கி வைக்கும் ஸ்டாலின்

(டில்லி)

மக்களைத் தேடி மருத்துவம் என்ற திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் விரைவில் தொடங்கி வைக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகின்ளன.

கொரோனா ஊரடங்கு காலத்தில் நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற நோய் உள்ளவர்கள் மாத்திரைகள் வாங்குவதற்கு சிரமப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.



இதனால் இவர்களுக்கு வீடுகளுக்கே சென்று மருந்துகள் வழங்கும் திட்டத்தை முதல்வர் விரைவில் தொடங்கி வைக்க உள்ளதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

முதற்கட்டமாக நீரிழிவு, இரத்த அழுத்தம் உடைய 20 இலட்சம் பேர் கண்டறியப்பட்டு வீடு தேடிச் சென்று மருந்துகள் வழங்கப்படும் என்று மேலும் அவர் தெரிவித்தார். (8-7)

## அமெரிக்கத் தூதரகங்கள் மீது ரொக்கெட் , ட்ரோன் தாக்குதல்

(மொஸ்கோ)

ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள அமெரிக்க தூதரகங்கள் மற்றும் இராஜதந்திரிகளை இலக்கு வைத்து ரொக்கெட் மற்றும் ட்ரோன் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

அத்துடன், ஈராக்கில் உள்ள அமெரிக்க விமானத் தளத்தை இலக்கு வைத்து கடந்த சில நாட்களில் குறைந்தது 14 ரொக்கொட்டுக்கள் ஏவி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஈராக் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல்களில் அமெரிக்கப் படைத் தரப்பைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல்களுக்கு உடனடியாக எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும் ஈரானிய ஆதரவுப் போராளிகளால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

பக்தாத்தின் பசுமை மண்டலத்திற்குள் உள்ள அமெரிக்க தூதரகத்தை இலக்கு வைத்து நேற்று வியாழக்கிழமை அதிகாலை இரண்டு ரொக்கெட்டுகள் வீசப்பட்டதாக ஈராக் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கடந்த செவ்வாய் மற்றும் நேற்று முன்தினம் புதன்கிழமைகளிலும் ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்களை குறி வைத்து ட்ரோன் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக குர்திஷ் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.(8-7)


## டுபாய் துறைமுகத்தில் நின்ற கப்பலில் பாரிய தீ விபத்து

(டுபாய்)

சூயஸ் கால்வாய் கேட்ட 550 மில்லியன் இழப்பீட்டு தொகையை வழங்கி "எவா கிவன் கப்பலை 3 மாதங்களுக்கு பின் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டது.

டுபாயில் உள்ள துறை முகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கொள்கலன் கப்பல் பயங்கரமாக வெடித்துச் சிதறி தீப்பிடித்து எரிந்துள்ளது.

உலகின் மிகப்பெரிய துறைமுகங்களில் ஒன்றான ஜெபெல் அலி துறை முகத்தில் தரித்து நின்ற குறித்த கப்பலில் திடீரென வெடிச் சத்தம் கேட்டதையடுத்து, அது தீப்பிடித்து எரியத் தொடங்கியுள்ளது.



துறைமுகத்திலிருந்து 25 கிலோ மீற்றர் தொலை வில் உள்ள டுபாய் நகரின் வானுயர்ந்த கட்டடங்களின் சுவர்களும் ஜன்னல்களும் அதிர்ந்ததால் மக்கள் பீதியடைந்துள்ளனர். விபத்திற்கான காரணம் இதுவரை தெரியவில்லை என்ற போதிலும் எளிதில் தீப் பற்றக்கூடிய பொருட்கள் கப்பலில் இருந்ததா? என்பது குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (8-7)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-4 022 675**

**தொற்று :-186 070 036**

**(நேற்று மாலைநிலவரம்)**

## கொரோனா காலப்பகுதியில் அதிகரிக்கும் குழந்தை திருமணம்

(டில்லி)

தமிழகத்தில் கொரோனா காலகட்டத்தில் 100 இற்கும் மேற்பட்ட குழந்தைத் திருமணங்கள் நடைபெற்றுள்ளதாக குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் சரஸ்வதி ரெங்கசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அவர், 'தமிழகத்தில் கொரோனாவினால் 93 குழந்தைகள் தாய்-தந்தை இருவரையும் இழந்துள்ளனர். அதேநேரம் தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 593 ஆக காணப்படுகிறது.

தமிழகத்தில் கொரோனாக் காலகட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தை திருமணங்கள் நடந்துள்ளன. அதில் தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குழந்தை திருமணத்தை தடுத்து நிறுத்துவதற்கான விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது' என அவர் மேலும் தெரிவித்தார். (8-7)

## நெடுஞ்சாலைக்காக வீட்டை கொடுக்க மறுத்த பெண் 10 வருடங்களாக போராடிய அரசாங்கம்

### -இறுதியில் நடந்தது என்ன?-



(பீஜிங்)

சீனாவில் நெடுஞ்சாலை அமைக்க ஒரு பெண் வீட்டை தராததால் அந்தப் பெண்ணின் வீட்டைச் சுற்றி சாலை அமைக்கப் பட்ட சம்பவம் அண்மையில் நடந்து ள்ளது.

தனியார் நிறுவனம் அரசு குறிப்பிட்ட அந்த இடத்தின் உரிமையாளர்களிடம் பேசி அவர்களது இடத்தை எல்லாம் வாங்கி அதில் சாலை அமைத்துத்தர வேண்டும் என ஒப்பந்தம் செய்திருந்தது.

ஆனால் அப்பகுதியில் உள்ள ஒரு சிறிய வீடான அதாவது சுமார் 40 சதுர மீற்றர் அளவு கொண்ட இடத்தை சொந்தமாக வைத்திருந்த பெண்ணா லியாங் என்பவர் அந்த இடத்தை விற்பனை செய்ய மறுத்து விட்டார். இறுதிவரையிலும் அந்த பெண் விருப்பம் இல்லாமல் அந்த இடத்தை வாங்க முடியாது என்பதால் அந்த பெண் இருக்கும் இடத்தில் மட்டும் ரோடு செல்லாமல் சுற்றி செல்லும் படி பாலத்துடன் கட்டமைக்கப்பட்டது. (8-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானில் தலிபான்களுக்கு எதிராக ஆயுதமேந்தும் பெண்கள்



(காபூல்)

**ஆப்காஸ்தானில் நிலைகொண்டிருந்த அமெரிக்க மற்றும் நேட்டோ படையினர் நாட்டை விட்டு வெளியேறி வருகின்ற நிலையில், தலிபான்களுக்கு எதிராக போராட அங்குள்ள பெண்கள் ஆயுதமேந்த தொடங்கியுள்ளனர்.**

பெரும்பானான பெண்கள் கலாஷ்னிகோவ் துப்பாக்கிகளையும் ஆப்கானிஸ்தானின் கொடியையும் சுமந்து நிற்கும் படங்கள் கடந்த சில நாட்களாக வெளியாகின.


தலிபான்களுடன் அரசாங்கத்தால் தனியாகப் போராட முடியாது என்ற காரணத்தால், ஜாஸ்ஜான் மற்றும் கௌர் பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் ஆப்கானிஸ்தான் தேசிய இராணுவத்திற்கு ஆதரவாகக் களமிறங்கியுள்ளனர்.

தற்போது ஆப்கானிஸ்தானில் பெண்களின் இந்த முன்னெடுப்பு, காபூல், ஃபாரியாப், ஹெராத் மற்றும் பிற நகரங்களிலும் கூட தொடங்கியுள்ளது.

தலிபான்களின் அடக்குமுறை மற்றும் வன்முறைக்கு எதிராகவும் தங்கள் சுதந்திரம் வேண்டியும் அனைவரும் முன்னிற்க வேண்டும் என அங்குள்ள பெண்கள் வலியுறுத்துகின்றனர்.

ஆப்கான் பெண்கள் ஆயுதம் ஏந்துவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (8-7)

# ஹெய்டி ஜனாதிபதி படுகொலை; சந்தேக நபர்கள் 4 பேர் சுட்டுக்கொலை



(ஹெய்டி)

ஹெய்டி ஜனாதிபதி ஜோவனல் மோஸ் படுகொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக, நான்கு பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளதோடு இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தென்னமெரிக்கா- வட அமெரிக்கா கண்டத்துக்கு மத்தியில் அமைந்துள்ள தீவு நாடான ஹெய்டி ஜனாதிபதி ஜோவனல் மோஸ், தனது பதவிக்காலம் முடிந்த போதும், ஓராண்டு காலம் பதவியில் நீடிக்கப்போவதாக அறிவித்தார்.

இதனால் எதிர்க்கட்சிகள் அவருக்கு எதிராக போராட்டம் நடத்தி வந்தன. இந்த நிலையில் அவரது வீட்டுக்குள் புகுந்த ஆயுதக் கும்பல், ஜனாதிபதி ஜோவனல் மோஸ் மற்றும் அவரது மனைவி மீது துப்பாக்கி சூடு நடத்தியது.

இதில் ஜனாதிபதி ஜோவனல் மோஸ் உயிரிழந்தார். அவரது மனைவி மார்ட்டின் மோஸ் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது குறித்து ஹெய்டியின் இடைக்கால ஜனாதிபதி கிளாட் ஜோசப் கூறுகையில், 'ஜனாதிபதி கொலை செய்யப்பட்டாலும் நாட்டின் பாதுகாப்பு நிலைமை கட்டுக்குள் இருக்கிறது.

இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் கைது செய்யப்படுவார்கள். அவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனக் கூறினார். (8-7)

# 'எவர்கிவன்' கப்பலை விடுவித்தது சூயஸ் கால்வாய் ஆணையம்

(கெய்ரோ)

சர்வதேச அளவில் உலகின் மிக முக்கிய கப்பல் போக்குவரத்து வழித்தடமாக விளங்குகிறது சூயஸ் கால்வாய். இந்த கால்வாயில் கடந்த மார்ச் மாதம் 'எவர்கிவன்' என்ற மிகப்பெரிய சரக்கு கப்பல் குறுக்கு பக்கமாக தரை தட்டி நின்றது.

ஒரு வார கால முயற்சிக்கு பிறகு 'எவர்கிவன்' கப்பல் மீண்டும் மிதக்கும் நிலைக்குக் கொண்டு வரப்பட்டது.

இருப்பினும் கப்பல் தரை தட்டி நின்ற காரணத்தினால் தங்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டை வழங்கும் வரை கப்பலை விடமாட்டோம் என 'எவர்கிவன்' கப்பலின் உரிமையாளரான ஜப்பானை சேர்ந்த ஷோய் கிசென் கைஷாவிடம் சூயஸ் கால்வாய் ஆணையம் தெரிவித்தது.

அதற்காக 'எவர்கிவன்' கப்பலை சூயஸ் கால்வாய் அருகே உள்ள ஒரு ஏரியில் பிணையாக பிடித்து வைக்கப்பட்டது. சுமார் 916 மில்லியன் அமெரிக்க டொலர்களை (இந்திய மதிப்பில் சுமார் ரூ.6 ஆயிரத்து 836 கோடி) இழப்பீடாக சூயஸ் கால்வாய் ஆணையம் கேட்டது. எனினும் பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைக்கு பிறகு இழப்பீட்டு தொகையை 550 மில்லியன் அமெரிக்க டொலர் (ரூ.4 ஆயிரத்து 108 கோடி) வரை சூயஸ் கால்வாய் ஆணையம் குறைத்து கொண்டது.

இந்த நிலையில் சூயஸ் கால்வாய் ஆணையம் கேட்ட இழப்பீட்டு தொகையை வழங்க 'எவர்கிவன்' கப்பலின் உரிமையாளர் ஷோய் கிசென் கைஷா ஒப்புக் கொண்டார். இது தொடர்பான ஒப்பந்தத்திலும் அவர் கையெழுத்திட்டார். இதனை தொடர்ந்து, 3 மாதங்களுக்குப் பிறகு 'எவர்கிவன்' கப்பலை சூயஸ் கால்வாய் ஆணையம் நேற்று முன்தினம் விடுவித்தது. (8-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு

## ஜி.எஸ்.பி.வரிச்சலுகையை பாதுகாக்க வேண்டும்

(கொழும்பு)

**நாட்டில் கையிருப்பில் இருக்கும் அந்நியச்செலாவணி எதிர்வரும் 3 மாதங்களுக்கே போதுமானது. இவ்வாறான நிலையில் ஜி.எஸ்.பி.வரிச்சலுகையும் இல்லாமல் போனால் அது நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என எதிர்க்கட்சி உறுப்பினர் எம். உதயகுமார் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஏற்றுமதி,இறக்குமதி தொடர் பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதாரத்தில் முக்கிய அம்சமாகும். ஏற்றுமதி குறைந்து இறக்குமதி அதிகரித்தால் அது நாட்டின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். ஆனால் அரசாங்கம் சில பொருட்களுக்கு இறக்குமதிக்கான தடையை ஏற்படுத்தி ஒருசிலருக்கு அதற்கான அனுமதியை வழங்கி அவர்களுக்கு இலாபம் ஈட்டும் வகையில் நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

அரசாங்கம் சில வர்த்தக பொருட்கள் இறக்குமதி செய்வதை தடைசெய்திருக்கின்றது. இது வெளிநாடுகளுடன் பகையை ஏற்படுத்தாமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

வர்த்தகம் என்பது ஒருவழி பாதை அல்ல என்பதை தெரிவித்து ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சில நாடுகள் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருப்பதை அரசாங்கம் மறந்துவிடக்கூடாது.

அத்துடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அந்நிய செலாவணி முக்கிய பங்களிக்கின்றது. அதுவும் ஏற்றுமதி, இறக்குமதியிலேயே தங்கி இருக்கின்றது. ஆனால் எமது நாட்டின் அந்நிய செலாவணி மிகவும் வீழ்ச்சியடைந்து செல்வதை காணக்கூடியதாக இருக்கின்றது.

நாட்டில் தற்போது கையிருப்பில் இருக்கும் அந்நிய செலாவணி வெறும் 4 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது எதிர்வரும் 3 மாதங்களுக்கே இறக்குமதி செலவினங்களுக்கு போதுமாக இருக்கின்றது. ஆப்கானிஸ்தான் நாட்டைவிட குறைந்த அந்நியசெலாவணியை பெறும் நாடாக இலங்கை மாறி இருக்கின்றது.

இவ்வாறான நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையும் நிறுத்தப்பட்டால் மேலும் பாதிப்பு ஏற்படும். அதனால் பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்கிவிட்டு ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிச்சலுகையை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

அத்துடன் இந்த சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி

(கொழும்பு)

நாட்டின் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த வாரம் முதல் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனிடையே, ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலை கல்விசாரா ஊழியர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (நி-5)

# முன் வரிசையில் இருந்து

## பின்வரிசைக்கு சென்ற அமைச்சர்



(கொழும்பு)

நிதியமைச்சரான பசில் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றப் பின்னர், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு பாராளுமன்றத்தில் ஒதுக்கப்பட்டிருந்த ஆசனம் பறிபோயுள்ளது.


பசில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றத்தை அடுத்து பாராளுமன்றத்தின் ஆளும் கட்சியின் முன் வரிசையில் அவருக்கு 9 ஆவது இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாக படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணாந்து தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் இந்த ஆசனம் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து சுகாதார அமைச்சருக்கு 10 ஆவது ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஆளும் கட்சியின் முன்வரிசையில் இருந்த பவித்ரா வன்னியாராச்சி முன்வரிசையில் இருந்து பின்வரிசை செல்ல நேரிட்டுள்ளதாக பாராளுமன்றத் தகவல் தெரிவிக்கின்றன. (நி-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2348

மகேஷ்




சுமங்கலி




ஜீவிதா




கோலமுகி




தருண்




யுகேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் துறை ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படுமா?

(கொழும்பு)

நாட்டிலுள்ள தனியார் துறை ஊழியர்களின் ஆகக் குறைந்த சம்பளத் தொகையான 10,000 ரூபாவை 12,500 ரூபாவாகவும் ஆகக் குறைந்த நாள் சம்பளத் தொகையான 400 ரூபாவை 500 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

தனியார் துறை ஊழியர்களுக்கான ஆகக் குறைந்த சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள சட்டமூலம் குறித்து தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொழிலமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

தற்பொழுது காணப்படும் ஆகக் குறைந்த சம்பளத் தொகையான 10,000 ரூபாவை 12, 500 ரூபாவாகவும் ஆகக் குறைந்த நாள் சம்பளத் தொகையான 400 ரூபாவை 500 ரூபாவாக அதிகரிப்பதற்கும் 2016 ஆம் ஆண்டு 3 ஆம் இலக்க வேலையாட்களின் குறைந்தபட்ச வேதனச் சட்டத்தின் 3 ஆவது சரத்தை திருத்துவதாக இது அமையும்.

இந்தச் சட்டமூலம் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஊடாக விதிக்கப்பட்ட எந்தவொரு தடைக்கோ அல்லது கட்டுப்பாடுகளுக்கோ உட்படாது.

அரசியலமைப்புக்கு உட்பட்டது என்று சட்டமா அதிபர் சட்டரீதியான சான்றிதழ் வழங்கியிருப்பதாகவும் இதற்கமைய இச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிப்பது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. (நி-5)

# திருட்டுத்தனமாக தடுப்பூசி போட்ட கொரோனா நோயாளி

(கொழும்பு)

கொரோனாவால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவரும் தனிமைப்படுத்தப்பட்ட நபர் ஒருவரும் மீகொடையில் உள்ள தடுப்பூசி மையத்திற்கு வருகை தந்து திருட்டுத்தனமாக தடுப்பூசி பெறப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக மீகொடை பொதுச் சுகாதார ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

பானலுவ பகுதியில் உள்ள குறித்த நபருக்கு கடந்த 2 ஆம் திகதி தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அவரது குடும்பத்தினர் நாளை 10 ஆம் திகதி வரை தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டு இருந்தனர்.

எனினும் இதற்கிடையில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நபரும், தனிமைப்படுத்தப்பட்ட நபரும் கொரோனா தடுப்பூசியை பெற்றுள்ளனர்.

ஒரு கொரோனா நோயாளி தடுப்பூசி பெற வந்ததால் அங்கு தடுப்பூசி போட்டவர்கள் மற்றும் பெற்றுக்கொள்ள வந்தவர்கள் என அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அலுவலகம் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தை மீறியதற்காகவும் கிரிமினல் குற்றத்தைச் செய்ததற்காகவும் இருவர் மீதும் வழக்குத் தொடரப்படும் என்று மீகொடை பொதுச்சுகாதார ஆய்வாளர் ராஜித புஷ்ப குமார தெரிவித்தார். (நி-5)



அரசாங்கத்தின் ஒடுக்கு முறைக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் நேற்று பாராளுமன்றத்திற்கு முன்னால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் ஏனைய உறுப்பினர்களும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

# பைசர் தடுப்பூசி செலுத்தும் திட்டம் திடீரென நிறுத்தப்பட்டது

## இராணுவத் தளபதி

(கொழும்பு)

அஸ்ட்ரா ஜெனெகாவின் முதலாம் தடுப்பூசியைப் பெற்றவர்களுக்கு 2 ஆம் கட்டமாக பைசர் தடுப்பூசி செலுத்தும் திட்டம் நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆம் வாரத்தில் 1.4 மில்லியன் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைக்கவுள்ளன.

இதன் காரணமாகவே பைசர் தடுப்பூசி செலுத்தும் திட்டம் நிறுத்தப்பட்டதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இலங்கையில் அஸ்ட்ரா ஜெனெகாவின் முதலாம் தடுப்பூசியை பெற்றவர்களுக்கு இரண்டாம் கட்டமாக அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பைசர் தடுப்பூசி செலுத்தும் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நட்புக்கு யோசனைகள்!

ஒருத்தர் முகத்தை உம் என்று வைத்துக்கொண்டு வந்துக்கொண்டிருந்தார். ஏன்? என்று கேட்டேன்.

"யார் என்னை பார்த்தாலும் உடனே முகத்தைத் திருப்பிக்கொண்டுப் போகிறார்கள் சார்" என்றார்.

"உங்களிடம் பிரியமாக பேசுகிறதிற்கு நண்பர்களே கிடையாதா?" என்று கேட்டேன்.

"அப்படி யாரும் இல்லையே" என்றான்.

அதிகமான நண்பர்கள் கிடைக்க வேண்டும் என்றால் அதுக்கென்ற சில உத்திகள் இருக்கின்றது... அமெரிக்க எழுத்தாளர் (டேல் கார்னகி) ஒருத்தர் சொல்லியிருந்தார்! என்றேன்.

"அப்படியென்றால் அதை எனக்கு சிறிது சொல்லிக் கொடுங்கள் என்று ரொம்ப ஆர்வமாக கேட்டார்.உடனே அந்த உத்திகளை நான் வரிசையாக சொல்ல ஆரம்பித்தேன்.

முதல் குறிப்பு:

எதிரிலே உள்ளவர்கள் நிறைய பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். நம்மைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கக் கூடாது.

அவர் பேசுகிற விடயம் எதுவாக இருந்தாலும் ஆமாம்... நல்லது என்று சொல்லி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது... கூடுமான வரைக்கும் யாரிடமும் அநாவசியமாக வாதம் பண்ணக்கூடாது.

மூன்றாவது... எந்த பிரச்சனைகளையும் அடுத்தவர்களின் கண்ணோட்டத்திலே பார்க்க வேண்டும்.

எப்போதும் அடுத்தவர்களின் மனோபாவத்தை நாம் புரிந்து வைத்திருந்தால் எங்களை யாராலேயும் வெல்ல முடியாது.

நான்காவது... ஒருவரிடம் பேச ஆரம்பிக்கும் போது இயல்பாக – அன்பாக ஆரம்பிக்க வேண்டும்.

உதாரணத்திற்கு... உங்களுக்கு இந்த சட்டை ரொம்பப் பொருத்தமாக இருக்கிறது என்று ஆரம்பிக்கலாம். அதை விட்டு விட்டு அன்றைக்கு என்ன சார் என்னை அம்போ என்று விட்டு விட்டு அம்பேல் ஆயிட்டீங்க? என்று ஆரம்பிக்கக் கூடாது!

ஐந்தாவது... விடயம்: நம்முடைய தவறுகளை தயக்கமில்லாமல் ஒத்துக் கொள்ள வேண்டும். அதற்காகக் கூச்சப்படக்கூடாது.

ஆறாவது... அடுத்தவர்களின் கருத்துகளுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும். நீங்கள் சொல்கின்றது தப்பு என்று முகத்திலே அடித்தாப்பிலே பேசக்கூடாது.

ஏழாவது... விடயம் என்னவென்றால்...

சில பேர் எப்போது பார்த்தாலும் சவால் விட்டுக்கொண்டே இருப்பார்கள்.அநாவசியமாக சாவல் விடக்கூடாது!

எட்டாவது ...நம்முடைய கருத்து என்னவோ அதை மற்றவர்களின் வாயிலிருந்து வரவழைக்க வேண்டும். அப்படி வரவழைக்கிறதிற்கு முயற்சி பண்ண வேண்டும்.

ஒன்பதாவது குறிப்பு... நம்முடைய யோசனையை புதிய முறையிலே சொல்லிப் பார்க்கலாம். அடுத்தவர்களின் சொல்கின்ற யோசனையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அந்த யோசனை மகாமோசமாக இருந்தால் கூட அதை ஏற்றுக் கொள்ள கின்ற மாதிரி நடிக்கலாமாம்!பத்தாவது ... ரொம்ப முக்கியமானது:

அதாவது அநாவசியமாக பொய் சொல்லக் கூடாது.அப்படி எப்போதாவது பொய் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பெரிய பொய்யா சொல்ல வேண்டுமாம்.அதை நம்பும் படியாகச் சொல்ல வேண்டுமாம். சில சமயம் தேவைப்பட்டால் பொய்யை உண்மையா மாற்றிக்கலாமாம். அது எப்படி என்றால்.

எனக்கு கார் ஓட்டத் தெரியும் என்று நண்பர்களிடம் பொய் சொல்லியாச்சு ..நண்பர்கள் நிஜமாகவே ஒரு கர்ரைக் கொடுத்து ஓட்டு என்று சொல்வதற்கு முன்னர் ஏதாவது ஒரு டிரைவிங் ஸ்கூலில் சேர்த்து கார் ஓட்டக்கற்றுக்கொள்வது. இது ஒரு உதாரணம்.

இது மாதரி பொய்யை உண்மையாக்கிக் கூட சில பிரச்சினைகளைத் தீர்த்துவிடலாம்.

பதினொராவது ... என்ன சொல்கிறது என்றால் உயர்ந்த நோக்கங்களை மட்டும் வெளியிலே பேச வேண்டும். உள் மனது எவ்வளவு ஒட்டடை படிந்து கிடந்தாலும் பரவாயில்லையாம்.

பன்னிரண்டாவது – சிறந்த நல்ல நண்பர்களைத் தேடித் தான் பெற வேண்டியிருக்கும். அவ்வளவு சுலபமாக கிடைக்க மாட்டார்கள்.இவ்வளவு குறிப்புகளும் அமெரிக்க நிபுணர் ஒருத்தர் சொல்லியிருக்கின்றார். இப்படியெல்லாம் நடந்து கொண்டால் நமக்கு நல்ல நண்பர்கள கிடைப்பார்களாம். முயற்சி செய்து பார்க்கலாம்.

இநதக் காலத்திலேயெல்லாம் எத்தனையோ விதமான நண்பர்கள் உண்டு. ஒருத்தர் மிகக் கவலையோடு நின்று கொண்டிருந்தார். கண் கலங்கியிருந்தது.


ஏன் இப்படி கவலையோடு நின்றுகொண்டிருக்கின்றீர்கள்? என்று கேட்டேன். என்னுடைய நண்பன் ஒருத்தன்...: ஒரு நாள் கோபத்திலே என்னைப பார்த்து... உன்னுடன் ஒரு வருடத்துக்குப் பேசமாட்டேன் போ.. என்று சபதம் போட்டுவிட்டான். என்றார்.

அதற்காகவா இப்படிக் கவலைப்படுகின்றீர்கள்? என்று கேட்டேன். இதற்கு அவர்.நான் அதற்காகக் கவலைப்படவில்லை சேர்.. அது ஒரு வருடக்கெடு இன்றையோடு முடிகின்றது சேர்.. அதை நினைத்தால் தான் கவலையாக இருக்கிறது. என்றார் சோகமாக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

22



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

மேலும், இந்த சான்று ஒரு அராங்கத்தால் பராமரிக்கப்பட வேண்டிய சட்டபூர்வமான தன்மை, செயல்முறைகள், கடந்தகாலம், தொடர்ச்சி, முன்கணிப்பு ஆகியவற்றில் எப்போதாவது சவால் செய்யப்படலாம் என்ற புரிதலை வழங்குகிறது இத்தகைய சவால் நல்லிணக்கத்தை ஊக்குவிக்காது, இது அரசாங்கத்தின் மீது, குறிப்பாக இந்திய தெற்குத் தொகுதியால் செலுத்தப்படும் கடுமையான அழுத்தமாக எனக்குத் தோன்றுகிறது, சில சமயங்களில் அவர்களால் வெல் வெட்கையுறை மூலம் நுட்பமாகக் கையாளப் படுகிறது. அல்லது, அவ்வாறு கருதுவதற்கு எமக்கு தனியுரிமை இல்லையா?

அரசியல் வாதிகள், சில தொழில் வல்லுநர்கள், கருத்துரைப்பவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோரின் அறிக்கைகளிலிருந்து நான் காண்கிறபடி, அடுத்தடுத்த அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட நில அதிகாரப் பகிர்வுச் செயற்பாடுகள் தொடர்பான சில நடவடிக்கைகளை நான் பின்வருமாறு குறிப்பிட்டு காட்டுகிறேன்.

1) 13 ஆவது திருத்தம் பல நிர்வாக ஏற்பாடுகள் மற்றும் சட்டவிதிகளை முன்மொழிந்துள்ளது, 13 ஆவது திருத்தத்தினபடி காணி அதிகார பகிர்வுக்கு வாய்ப்புள்ளது. காணிதொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் 13ஆவது திருத்தத்தின் பின்னிணைப்பு II இன்படி செய்யப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வழங்கப்படும் அதிகாரங்கள் தேசிய காணி ஆணைக்குழு மூலம் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். இதன் மூலம் அரசாங்க நலன்களைப் பாதுகாக்க முடியும், ஏனெனில் இது அடிப்படை சட்டத்திலிருந்து அதாவது அரசியலமைப்பிலிருந்து அதிகாரத்தைப் பெறுகிறது.

2) அப்போதைய காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் (அமைச்சர் காமினி திஸாநாயக்க) 1988 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 4 ஆம் திகதி மாகாண முதல்வர்கள், மாகாண அமைச்சர்கள், மாகாண தலைமைச் செயலாளர்கள் மற்றும் மூத்த அதிகாரிகளைச் சந்தித்து 13 ஆவது திருத்தத்தின் கீழ் காணி அதிகாரங்களை பகிர்ந்தளிப்பது தொடர்பான அரச கொள்கையைத் தெளிவுபடுத்தினார் என்பது இவ்விடத்தில் நினைவூட்டப்படுகிறது.

காணி அமைச்சரின் செயலாளர் சுற்றறிக்கைகள் மூலம் அவரது அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் நடைமுறைப்படுத்தக் கூடிய காணி அதிகாரங்களின் அளவையும் உள்ளடக்கத்தையும் தெரிவித்ததோடு 13 ஆவது திருத்தம் நிரல் 1 இன் கீழ் காணிகள் மற்றும் நீர்ப்பாசனத்தின் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ள மாகாணங்களில் உள்ள அதிகாரிகளின் அதிகாரங்கள் பற்றியும் காணி சம்பந்தமாக மாகாண காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றியும் அறிவிக்கப்பட்டது. **(Circular 01/270 of 23-12-1989 issued by Secretary Ministry of Land and Land Development addressed to all PCs and Government Agents (GAs).)**

3) மேற்கண்ட சுற்றறிக்கை அரசாங்கத்திற்கும் மாகாண நிர்வாகிகளுக்கும் இடையிலான பரந்த உரையாடலுக்குப் பின்னர் வெளியிடப்பட்டது. மேலும் காணிப் பகிர்வுக்கான வரைவுச்சட்டத்தை மாகாண சபைகளில் சமர்ப்பிக்கும் வரை அச்சுற்றிக்கை நீட்டிக்கப்பட்டது. இதன்மூலம் மாகாண சபைகள் தமது சட்ட தயாரிப்பை நிறைவேற்றிக் கொள்ள அமைச்சு எதிர்பார்த்தது.

4) இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள படி காணி நிர்வாகத்திற்கான வளங்களை அரசு மாகாணங்களுடன் பகிர்ந்து கொள்ள அமைச்சு விரும்பியது.

5) ஜனாதிபதியால் எந்தவொரு குடிமகனுக்கும் அல்லது எந்தவொரு நிறுவனத்திற்கும் ஒரு மாகாணத்தில் உள்ள அரச காணிகளை 13 ஆவது திருத்தத்தின் பின்னிணைப்பு II இன் பிரிவு 1:3 இன் அடிப்படையில் கையுதிர்த்தல் **(disposition)** மற்றும் காணிகளைப் பராதீனப்படுத்தல் **(alienation)** போன்று காணி அதிகாரத்தை ஒப்படைப்பதில் ஏற்படும் சட்ட சிக்கல்கள் அல்லது ஏற்படும் மோதல் சம்பந்தமாக காணி அமைச்சினால் ஜனாதிபதி செயலகத்திற்கு சுட்டிக் காட்டப்பட்டது. **(Letter numbered 03/PC of 27-01-1989 addressed to the Secretary to the President by Secretary Ministry of Lands and Land Development.)**

6) இந்த சட்ட மோதலுக்கு சட்டமா அதிபர் பின்வருமாறு பதிலளித்திருந்தார். அதாவது அரச காணி கட்டளைச் சட்டத்தின் 105 ஆவது பிரிவின்படி எந்தவொரு அதிகாரமும் தகுதிவாய்ந்த அதிகாரியான ஜனாதிபதிக்கு உரியதென்று. **(Letter numbered E 21/89 of February 14th 1989 addressed to the Secretary to President by the Attorney General referring to the letter numbered 46/1/178 from the Secretary to the President.)** ஆனால் சட்டமா அதிபர் மேலும் குறிப்பிடுகையில், "முன்மொழியப்பட்ட அதிகாரப் பகிர்வை உருவாக்கும் முன், கட்டளைச்சட்டத்தின் 105 ஆம் பிரிவுடன் 95 மற்றும் 96 பிரிவுகள் சேர்த்து வாசிக்கப்பட்டு 95 மற்றும் 96 பிரிவுகளின் கீழ் செய்யப்பட்ட ஒழுங்கு முறை 24 இன் மூன்றாவது அட்டவணையை திருத்தியமைக்க வேண்டியது அவசியம்" என்று அறிவுறுத்தினார். இந்த திருத்தம் இதுவரை செய்யப்பட்டது என்று நான் நினைக்கவில்லை.

7) 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பின் விளைவு ஏற்பாடுகள்) சட்டத்தை பாராளுமன்றம் நிறைவேற்றி, மே 30, 1989 அன்று சபாநாயகரால் சான்றிதழ் வழங்குவதற்கான ஒரு காலதாமதம் இருந்த போதும் அச்சட்டத்தைப் பார்க்கும் போது அது "அரசியலமைப்பை செயற்படுத்துவதில் தொடர்ச்சியாக அரசாங்கத்தின் ஆர்வத்தையும் நோக்கத்தையும் காட்டிய ஒன்பதாவது அட்டவணையின் பட்டியலில் உள்ள விடயங்களில் எழுதப்பட்ட சட்டத்தின் விளக்கத்திற்கான இடைக்கால ஏற்பாட்டைச் செய்வதற்கான ஒரு செயல்" என்பதை விளங்கிக் கொள்ள முடியும். இச்சட்டம் 13 ஆவது திருத்தத்தின் சகல விடயங்களுக்கும் (அரச காணி விடயங்கள் மட்டுமல்ல) பொருந்தும்.

8) ஒரு மாகாணத்தில் எந்தவொரு அரச காணியையும் கையுதிர்த்தல் **(disposition)** மற்றும் காணிகளைப் பராதீனப்படுத்தல் **(alienation)** குறித்து மாகாண சபைகளுக்கு முழு அதிகாரம் இருக்கும் என்ற அச்சம் அதிகாரப் பரவலாக்கத்தை எதிர்ப்பவர்கள் மத்தியில் இருந்தாலும், சட்டமா அதிபரின் கருத்தின் அடிப்படையில் காணி அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் சம்பந்தப்பட்ட மாகாண சபைகளின் ஆலோசனை, 13 ஆவது திருத்தத்தில் நிரல் -1 இன் விடயங்களுக்காக மாகாண சபைகளுக்கு காணிகளை கையுதிர்த்தல் (disposition) மற்றும் காணிகளைப் பராதீனப்படுத்தல் (alienation) போன்றவற்றிக்காக ஒதுக்கப்பட்ட அரச காணிகளுக்கு மட்டுமே தேவைப்படும் என்பதாகும். (Circular 02/230 of 24-07-1989 issued by Secretary Lands, Irrigation and Mahaweli Development).

ஆகவே, மாகாண சபைகளுக்கு அரச காணிகள் அவற்றின் தேவைக்கு மட்டும் விடுவிப்பதன் மூலம் மாகாண சபைகளின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டு / மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் மேலே குறிப்பிடப்பட்ட பயம் தேவையற்றதாக இருக்கலாம். இது சுருக்கமாக அடுத்த பந்தியில் (9) விபரிக்கப்பட்டுள்ளது. மேலும் மாகாண சபைகளின் காணித் தேவை தேசிய காணி ஆணைக் குழுவினால் திட்டமிடப்படும் (வகுத்த) தேசிய கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது (பின்னிணைப்பு II- பிரிவு 3:4 ஐப் பார்க்க).

9) அரச காணிகளை விடுவிப்பது மிகவும் முக்கியமானது. அதற்காக அப்போதைய (1989) காணி அமைச்சினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதன்படி, ஒரு மாகாண சபைக்கு காணி தேவைப்படும் போது, அம் மாகாண சபை காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சருக்கு ஒரு விண்ணப்பம் செய்யப்படும் போது, அது அமைச்சினால் செயற்படுத்தப்பட்டு அமைச்சரால் அங்கீகரிக்கப்படும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில்- கார் விபத்து; இரு பெண்கள் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பு - கிருலபனை - பூர்வாராம ரயில் கடவையில், நேற்று முன்தினம் மாலை கார் ஒன்றுடன் ரயில் மோதுண்டதில் இரு பெண்கள் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த இரு பெண்களும் சிகிச்சைகளுக்காக, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொள்ளுப்பிட்டி பகுதியிலுள்ள வேலைத்தளத்திலிருந்து மஹரகம பகுதியிலுள்ள தமது வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்த போதே, இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து பாதுக்கைக்கு சென்ற ரயிலே காருடன் மோதியுள்ளது. சுமார் 8 அடி தூரத்திற்கு கார் இழுத்துச்செல்லப்பட்டுள்ளது.



இந்த விபத்து தொடர்பில் கிருலபனை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (நி-5)

# தனிமைப்படுத்தல் சட்டத்தின்கீழ் பாரதூரமான அடக்குமுறைகளில் அரசு

## வழக்குத் தொடர ரணில் தீர்மானம்

(கொழும்பு)

மக்களின் ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கும் கைது செய்வதற்கும் தனிமைப்படுத்தல் சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது. இதற்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் வைரஸ் தொற்று சுகாதார நிலைமைகளை கவனத்தில் கொண்டு தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் இவ்வாறான கைதுகளை முன்னெடுக்க முடியாது என்பதை ஏற்கனவே அறிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறுகையில், பல்வேறு பிரச்சினைகளை மையப்படுத்தி நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றை அடக்குவதற்கு பதிலாக பிரச்சினைகளை தீர்க்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகின்றது. இதனை விடுத்து அடக்குமுறைகளையும் கைதுகளையும் கட்டவிழ்த்து விடுவது என்பது ஏற்புடையதல்ல. இதனை அனுமதிக்கவும் இயலாது. மக்கள் விடுதலை முன்னணி மற்றும் முன்னிலை சோஷலிச கட்சி என்பன முன்னெடுத்த ஆர்ப்பாட்டங்களில் கைதுகள் இடம்பெற்றுள்ளமை சட்டத்திற்கு முரணானதாகும்.


தனிமைப்படுத்தல் சட்டத்திற்குள் இவ்வாறான கைதுகளை முன்னெடுக்க இயலாது. எனவே பாதிக்கப்படுகிறவர்களுக்கு சட்டத்தின் பாதுகாப்பு கிடைப்பதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதனடிப்படையில் அடுத்த வாரத்தில் உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய உள்ளதாக ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டார். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## பெருமை மிகுந்த பிரதோஷம்



தேவர்கள் சிவனின் அனுமதியுடன் மீண்டும் பாற்கடலை கடைந்த போது அமிர்தம் தோன்றியது. அதை உண்டு ஆனந்தம் அடைந்தனர். அமிர்தம் உண்ட தேவர்கள் வேண்டுதலுக்கு இணங்க, சிவபெருமான் திருநடனம் புரிய முன்வந்தார்.

சரஸ்வதி வீணை வாசித்தாள். இந்திரன் புல்லாங்குழல் ஊதினான். பிரமன் தாளம் போட்டார். லட்சுமி தெய்வீக பாடல்கள் பாட, திருமால் மத்தளம் வாசித்தார்.

தேவர்கள், முனிவர்கள், யட்சர்கள், கின்னரர்கள், திசை பாலகர்கள் முதலிய அனைவரும் வந்து பிரதோஷ காலத்தில் இறைவனை வழிபட்டனர். சிவபெருமான் உமாதேவியார் காண நந்திதேவரின் இரு கொம்புகளுக்கு இடையே திருநடனம் புரிந்தார்.

சிவபெருமான் தேவர்களுக்கு திருநடனத் தரிசனம் கொடுத்தது சனிக்கிழமை மாலை நேரத்தில் (பிரதோஷ வேளையில்) ஆகும். எனவே சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷம் விசேஷமானதாக கருதப்படுகிறது.

### விரதம் இருக்கும் முறை

பிரதோஷ விரதம் இருக்க விரும்புகிறவர்கள் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் ஒன்றில் வரும், சனிக்கிழமை பிரதோஷ நாளாக பார்த்து இந்த விரதத்தை கடைப்பிடிக்க வேண்டும். பிரதோஷ தினத்தன்று அதிகாலையில் நீராடி காலைக் கடன்களை முடிக்க வேண்டும். சிவன் கோவிலில் சுவாமிக்கு முன் உள்ள நந்திக்கு அறுகம்புல் மாலை சாத்தி, சிவப்பு அரிசி நைவேத்தியம் செய்ய வேண்டும். நெய்விளக்கு வைத்து வழிபடுவது நல்லது.

முதலில் சிவபெருமானையும், ரிஷப (நந்தி) தேவரையும் வணங்க வேண்டும். பின்னர் இடமாக (பிரதட்சணமாக) சென்று சண்டிகேசுவரரை வணங்கி விட்டு சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் சிவன் நந்தியை தரிசிக்க வேண்டும்.

வழக்கம் போல் ஆலயத்தை வலமாக சுற்றிவரும் போது, நந்தி தேவரிடம் வந்து நின்றபடி அவருடைய கொம்புகளுக்கு நடுவே சிவலிங்கத்துக்கு தீபாராதனை காட்டுவதை கண்டு வழிபட வேண்டும். இது மாதிரி மூன்று முறை பிரதட்சணம் செய்ய வேண்டும்.

பின்னர் ரிஷப வாகனத்தில் சிவன், பார்வதி வலம் வரும்போது, உடன் சென்று பிரதட்சணம் செய்ய வேண்டும். அன்று முழுவதும் உணவின்றி உபவாசம் இருக்க வேண்டும். விபூதியை நெற்றியில் அணிந்து கொண்டு, சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்யப் பயன்படுத்தப்பட்ட புனிதநீரை அருந்த வேண்டும். வீட்டுக்குச் சென்று யாராவது ஏழைக்கு அன்னதானம் வழங்குவதும் நன்மை அளிக்கும்.

(தொடரும்)

# கடமைகளைப் பொறுப்பேற்றார் அஜித் ரோஹண

(கொழும்பு)

பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோஹண நேற்று முற்பகல் போக்குவரத்து மற்றும் குற்றத்தடுப்பு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக் கடமைகளை பொறுப்பேற்றார்.

சுகாதார வழிமுறைகளுக்கு அமைய பத்தரமுல்லையில் அவர் கடமைகளை பொறுப்பேற்றார். பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவிக்கு மேலதிகமாக, போக்குவரத்து மற்றும் குற்றத் தடுப்புப்பிரிவை சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண பொறுப்பேற்றுள்ளார். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 200 | 250 |
| தக்காளி | 120 | 130 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 50 |
| கோவா | 100 | 180 | 160 | 200 |
| கரட் | 150 | 160 | 180 | 200 |
| பூசணி | 80 | 70 | 50 | 120 |
| புடோல் | 100 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 250 | 230 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 260 | 250 | 240 | 400 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 180 | 180 | 160 |
| பயற்றங்காய் | 140 | 150 | 140 | 140 |
| லீக்ஸ் | 200 | 200 | 180 | 200 |
| பீற்றூட் | 160 | 140 | 120 | 160 |
| கறிமிளகாய் | 280 | 240 | 240 | 280 |
| முருங்கைக்காய் | 280 | 250 | 300 | 280 |
| போஞ்சி | 160 | 180 | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 60 | 40 |
| தேசிக்காய் | 180 | 160 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 200 | -- | 300 | -- |
| வெங்காயப்பூ | 260 | 240 | 100 | 320 |
| முள்ளங்கி | 80 | 150 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 |
| வல்லாரை | 15 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 100 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உழைப்பே அதிர்ஷ்டம் தரும்

ஒரு விவசாயிக்கு வயது அதிகமானதால் இறக்கும் தருவாயில் இருந்தார். தம் பிள்ளைகள் பொறுப்பில்லாமல் இருப்பதை பற்றி கவலையாக இருந்தார்.

ஒருநாள், அவர் தம் பிள்ளைகளை அருகில் அழைத்தார். தன்னுடைய நிலங்களை அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். அதுமட்டுமல்லாமல், அந்த நிலங்களில் ஓரிடத்தில், ஓரடி ஆழத்தில் புதையல் இருப்பதாகச் சொன்னார். அதைத் தேடி எடுத்துக் கொள்ளும்படி சொல்லி விட்டு இறந்து போனார்.


பிள்ளைகள் மூவரும் தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் காரியங்கள் அனைத்தையும் செய்தார்கள். அதன்பின், அவர் குறிப்பிட்டிருந்த புதையலை எடுப்பதற்காக நிலத்தைத் தோண்ட ஆரமபித்தார்கள்.

முதலில் மூத்த மகனின் நிலம் முழுவதையும் ஒரு அடி ஆழத்துக்கு தோண்டினார்கள். புதையல் எதுவும் கிடை க்கவில்லை.

ஒருவேளை, அப்பா "இரண்டடி" என்று சொல்வதற்கு பதிலாக "ஓரடி" என்று சொல்லி விட்டாரோ என்ற சந்தேகத்தில் பிள்ளைகள் மூவரும் சேர்ந்து, மூத்தவனின் நிலத்தை இன்னும் ஓரடி ஆழமாகத் தோண்டினார்கள். அப்போதும் அவர்களுக்குப் புதையல் கிடைக்கவில்லை.

எப்படியும் புதையலைக் கண்டுபிடித்து விட வேண்டும் என்ற வெறியில், இரண்டாவது மகனின் நிலத்தையும் இரண்டடி வரை தோண்டினார்கள். ஏமாற்றம்தான் மிஞ்சியது.

'இவ்வளவு தூரம் வந்த பின் எப்படி விட முடியும்' என்று கடைசி மகனின் நிலத்தையும் இரண்டடி தோண்டினார்கள். மறுபடியும் ஏமாற்றமே!



அப்பா மேல் வருத்தம் வந்தாலும், அவர்கள் 'சரி.. தோண்டியது வீணாக வேண்டாம்' என்று எண்ணி, அந்த நிலங்களில் விதை விதைத்தார்கள். நீர் பாய்ச்சினார்கள். உரம் போட்டார்கள்.

உழைப்புவீண்போகுமா? ஆண்டு முடிவில் அவர்கள் நிலத்தில் அமோக விளைச்சல். அறுவடை செய்து விற்றதில் அவர்களுக்குக் கொள்ளை லாபம். இப்படி உழைப்பால் வரும் பயனைத் தான் அப்பா புதையல் என்று குறிப்பிட்டார் என்று பிள்ளைகள் மூவரும் புரிந்து கொண்டார்கள்.

# மகாபாரதம்

சிசுக்களை அழித்த அஸ்வத்தாமனை கண்ணன் பழித்தார். தலையில் இருந்த மணியை வியாசர் தருமாறு கூற அவ்வாறே அளித்தான்.

"அறிவிலியே நீ தொழு நோயால் பீடிக்கப்பட்டுக் காட்டில் தன்னந்தனியாய்ப் பல ஆயிரம் ஆண்டுகள் தவிப்பாயாக" என்று அஸ்வத்தாமனை சபித்தார் வியாசர்.

உத்தரையின் கரு வில் உள்ள குழந்தை நல்லபடியே பிறந்து பரீட்சித் என்னும் பெயருடன் இந்நில உலகை ஆளுவான் என்றும் கூறினார்.

சாபப்படி அஸ்வத்தாமன் காட்டிற்குச் சென்றான். பாசறைக்குத் திரும்பிய கண்ணனும், பீமனும், அருச்சுனனும் திரௌபதியிடம் அஸ்வத்தாமனின் மணியைக் கொடுத்து ஆறுதல் கூறினர்.




அஸ்தினாபுரமே துயரக் கடலில் ஆழ்ந்திருந்தது. போரில் இறந்தவர்கள் வீடுகள் எல்லாம் துயரத்தில் மூழ்கி இருந்தது. மைந்தரை இழந்த திருதராட்டிரன், காந்தாரி இருவரும் வேரற்ற மரமாய் வீழ்ந்து வேதனையில் துடி த்தனர்.

விதுரர் - "யாருக்குத் தான் மரணமில்லை. மரணத்திற்கு வயது வரம்பு கிடையாது. மரணம் எந்த வயதில் வேண்டுமானாலும் நிகழலாம். போர்க்களத்தில் போரில் ஈடுபடுவோர் பிழைப்பதும் உண்டு. வீட்டில் பலத்த பாதுகாப்போடு இருப்பவர் இறப்பதும் உண்டு.

பழைய உடையை நீக்கி விட்டு புதிய உடையை உடுத்துவது போல உயிர்கள் இந்த உடலை விட்டு வினைப்படி வேறு உடலை எடுத்துக் கொள்கிறது.

வினைப்பயன் யாரையும் விடாது பற்றும் தன்மை உடையது. நாம் விதைக்கும்விதை முளைப்பது போல நாம் செய்த வினைப் பயன் நம்மை வந்து அடையும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடம்பரத்தின் மென்மையான மெத்தையின் மீதுதான் பெரும்பாலான ராஜ்யங்கள் அழிந்தன.
– யங்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெளிநாட்டுத் தூதுவர்களின் சந்திப்பும் சமாளிப்பும்

ஆகாசவாணி. செய்திகள் வாசிப்பது சறோஜ் நாராயணசாமி. இந்தக் குரலுக்கான எங்களின் காத்திருப்பு இற்றைக்கு முப்பத்தெட்டு வருடங்களுக்கு முன்னர் தொடங்கியது.

ஆகாசவாணி, மாநிலச் செய்திகள், லண்டன் பி.பி.சி தமிழோசை, வெரித்தாஸ் என்ற வானொலிச் செய்திகளோடு எங்களுக்குக் கிடைக்க வேண்டிய தீர்வுக்காகக் காத்திருந்தவர்கள் நாம்.

இந்தியப் பிரதமர் அன்னை இந்திராகாந்தி என்ன சொல்கிறார். பார்த்தசாரதியின் தூது ஒரு குருஷேத்திரமாக அமையுமா? அவசரமாக வந்துபோன நரசிம்மராவ் – முடிவு என்ன? என்ற செய்திகளை மேற்குறித்த வானொலிகள் பௌவியமாகக் கூறும்போது, எங்கள் கையில் தீர்வுப் பொதி கிடைத்த திருப்தியில் உறக்கம் ஆரத் தழுவிக் கொள்ளும்.

இதற்குப் பின்பான செய்திகளின் பரிணாமம் எவ்வாறாக மாறின என்பதும் நாம் அறிந்தவையே.

ஒவ்வொரு தாக்குதல் சம்பவங்களும் நம்பிக்கைகளுக்கு அடிக்கட்டுப் பசளைகளாயின.

இவ்வாறாக எதிர்காலத்தில் எங்களின் உரிமையும் வாழ்வும் உச்சமாக இருப்பதை உணர்ந்து கொண்டு கூடுமிடமெல்லாம் நடந்த சம்பவங்களை வர்ணனை செய்து செய்து மகிழ்ந்த கால்ங்கள் போயகல, இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் வெளிநாட்டுத் தூதுவர்களுடன் நடத்துகின்ற சந்திப்புகள் மீது நம்பிக்கை வைக்கின்ற பரிதாப நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இருந்தும் ஒற்றைவிரலைச் சுட்டி எங்கள் பொறுமையைச் சோதிக்க வேண்டாம். நாங்கள் எல்லாவற்றையும் மிகவும் நிதானமாக அவதானித்து வருகின்றோம் எனக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் ஐயா விடுகின்ற வெருட்டை இரசிப்பதிலும் ஒருவகை மகிழ்வுதான்.

என்ன செய்வது எல்லாம் முடிந்து கந்தறு நிலையில் இந்தியத் தூதுவர், பிரித்தானியத் தூதுவர், அமெரிக்க இராஜதந்திரி என இடையிடைச் சந்திப்புகள் மட்டுமே எங்களின் உயர் குருதி அழுத்தத்தை மிகச் சொற்பமாகக் குறைக்கின்ற மாத்திரைகளாயிற்று.

இங்கும் குறித்த மாத்திரையோடு; வெளிநாட்டுத் தூதுவர்களுடன், ஐயா சம்பந்தர் நடத்துகின்ற சந்திப்புகள் எங்களின் உரிமையை நிச்சயம் வென்றெடுக்கும் என்ற நம்பிக்கை கலந்த கூட்டுக்குளிகையையும் சேர்த்துச் சாப்பிட்டால் மட்டுமே மூளை நரம் பில் இரத்தக் கசிவு ஏற்படாத அளவில் எங் களின் உயர்குருதி அமுக்கத்தைக் குறைக்க முடியும்.

ஆம், கற்பனையோடு வாழப்' பழகுவது மட்டும்தான் எங்களின் இருப்பைத் தக்க வைக்குமாம்.

# பசிலின் வருகை அரசாங்கத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது

## வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

பசில் ராஜபக்ஷ அமைச்சராக பதவியேற்று கொண்டமை அரசாங்கத்தினை மேலும் வலுப்படுத்தியிருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளதுடன் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் தன்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

இது அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி அமைச்சராகப் பதவியேற்றுள்ள பசில் ராஜபக்ஷவின் ஆளுமை என்பது எமது மக்களினால் நன்கு அறியப்பட்ட ஒன்றாகும்.

அவ்வாறான ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகவும் பதவியேற்றுள்ளமை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் வழிநடத்தலிலும் பயணித்துக் கொண்டிருக்கும் எமது அரசாங்கத்தினை மேலும் வலுப்படுத்தி இருக்கின்றது.

அதேபோன்று, நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்கள் தொடர்பான நம்பிக்கையையும் மக்களுக்கு ஏற்படுத்திருக்கின்றமையை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

மேலும், கடந்தகாலங்களில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்து, அமைச்சர் பசில் ராஜபக்ஷ மேற்கொண்ட வேலைத் திட்டங்களும், எம்மால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவர் வழங்கிய ஒத்துழைப்புக்களும் வடக்கு-கிழக்கு மக்கள் மத்தியில் நிலையான இடத்தினை பிடித்திருக்கின்றமையினால் அவரின்தற்போதைய பதவியேற்பு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றது என மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** ஏ.வி. வீதி கொழும்புத்துறை, கொழும்புத்துறை- நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை வீதி, சுவாமியார் சந்தி, கொழும்புத்துறை வீதி, மணியந்தோட்டம், பழைய பூங்கா வீதி, கொழும்புத்துறை வீதிச் சந்தி, பாசையூர், பாசையூர் ஈச்சமோட்டை வீதி, பெரிய கோவில், புங்கங்குளம் கொழும்புத்துறை வீதி சந்தி, உதயபுரம், மணியந்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை, எச்.என்.பி. நெல்லியடி, இரும்பு மதவடி, காளிகோவிலடி, கரணவாய், மனோகரா அல்வாய், மத்தோனி, முடக்காடு, நாவலர் மடம், நெல்லியடி -பருத்தித்துறை வீதி, நெல்லியடி-கொடிகாமம் வீதி, சக்கலாவத்தை, சித்திவிநாயகர் பாடசாலை, தேவரையாளி, திக்கம், நெல்லியடி வீதி, திருமகள் சோதி வீதி, தூதாவளை, வதிரி- உடுப்பிட்டி பருத்தித்துறை வீதி சந்தி, வதிரி அரசடி, விக்னேஸ்வரா கரவெட்டி, நெல்லியடி இலங்கை வங்கி, கார்கில்ஸ் நெல்லியடி, ரூபின்ஸ் மருத்துவமனை, கரணவாய், தொலைத்தொடர்பு மாலுசந்தி, அட்டகிரி, மூத்தவிநாயகர் கோவிலடி, நவாலி கலையரசி வீதி நவாலி, சென். பீற்றர்ஸ் வீதி நவாலி, வேலக்கைப் பிள்ளையார் நவாலி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** சாந்தபுரம், இராணுவ ஆதார வைத்தியசாலை இரணைமடு, புதூர் கோவிலடி, புத்தூர் கோபுரம்,புதூர் கிராமம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** அறவந்துலாவ ஆகிய பிரதேசங்களிலும் தடைப்படும்.

# கைத்தொலைபேசியில் புலிகளின் படங்கள்

## கிளிநொச்சியில் 21 வயது இளைஞன் கைது

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் புகைப்படங்களை கைத்தொலைபேசியில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கிளிநொச்சியில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் குற்றச்செயலுக்காக இரும்பு வாள் ஒன்றை மறைத்து வைத்திருந்ததாகவும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவிற்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, உதயபுரம் பகுதியில் வைத்து சந்தேகநபரான 21 வயது இளைஞர்கைது செய்யப்பட்டுள்ளார். (ம)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### இரகசியங்களின் விவேகம்

இரகசியத்தை மறைக்க விவேகி எந்த முயற்சியும் எடுப்பதில்லை. இரகசியத்தை வெளிப்படுத்தவும் அவர் எந்த முயற்சியும் எடுப்பதில்லை. உதாரணமாக ஐந்து வயதுக் குழந்தையிடம் மாதவிலக்கு, இறப்பு ஆகியவைகளைப் பற்றி நீங்கள் பேசுவதில்லை.

ஆனால் குழந்தைகள் பெரியவர்களாக வளர்ந்த பின்னர் இவை அவர்களிடமிருந்து மறைத்து வைக்கப்படுவதில்லை. இயல்பான நடைமுறை நிகழ்ச்சிகளாகவே இவை கருதப்படுகின்றன.

ஓர் அஞ்ஞானி இரகசியத்தைப் பாதுகாக்க முயற்சிக்கிறார். மேலும் தவறான நேரத்தில் தவறான மனிதரிடம் தவறான இடத்தில் இரகசியத்தை வெளிப்படுத்தவும் செய்கிறார். மேலும் இரகசியங்களைப் பற்றி வீண் ஆர்ப்பாட்டம் செய்கிறார்.

இரகசியத்தைப் பாதுகாக்கும் முயற்சி பெரும் கவலையையும் அமைதியின்மையையும் ஏற்படுத்துகிறது.

இரகசியத்தை வெளிப்படுத்துவதாலோ அல்லது வெளிப்படுத்தாமல் இருப்பதாலோ அஞ்ஞானி இரகசியத்துடன் அமைதியாக இருப்பதில்லை. ஆனால் இரகசியத்தை வெளிப்படுத்தினாலும் அல்லது வெளிப்படுத்தாமல் இருந்தாலும் விவேகி இரகசியத்துடன் அமைதியாக இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

ஆகவே காலத்துக்குக் கட்டுப்பட்ட நாம் இராகு காலம் முதலியவைகளை அனுஷ்டிப்பது முறையேயாகும். அனுபவமில்லாத இளைஞர்கள் இதனைக் கேலி செய்வார்களானால் அது அவர்கள் அறியாமையாகும்.

**"அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா"** என்பது ஔவையார் வாக்கு.

**"உருவத்தால் நீண்ட உயர் மரங்களேனும் பருவத்தாலன்றிப் பழா"**

என்பது போல் நமக்கு ஆகுங்காலத்தில்தான் எல்லாம் ஆகும். (தொடரும்)

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### உங்கள் கனவில் எந்த கடவுள் வந்தால் என்ன பலன்?

❖ அம்பாள் கனவில் வந்தால் வீட்டில் நல்ல சுப காரியங்கள் நிகழும். குலதெய்வம் கனவில் வந்தால் குலதெய்வ வழிபாடு மேற்கொள்ள வேண்டும். மேலும் நல்ல சுபீட்சம் வருவதை குறிக்கும்.

❖ யானை துரத்துவது போல கனவு கண்டால் விநாயகருக்கு ஏதோ நீங்கள் செய்ய வேண்டியது பாக்கி உள்ளது என அர்த்தம்.

❖ கோவில் கோபுரம் வந்தால் பூர்வ ஜென்ம பாவம் நீங்கி விட்டது போலவும் நல்ல நிலைக்கு செல்ல போகிறீர்கள் என்றும் அர்த்தமாகும்.


❖ கடவுள் உங்களிடம் பேசுவது போல கனவு வந்தால் வாழ்க்கையில் குறை இன்றி, நல்லது உண்டாகும் என்பதாகும். (முற்றும்)

# பயங்கரவாத அச்சுறுத்தல் எதுவுமில்லை

## அமெரிக்காவுக்கு இலங்கை பதில்

(கொழும்பு)

**உளவுத்துறை அறிக்கைகளின் அடிப்படையில் இலங்கையில் பயங்கரவாத அச்சுறுத்தல் எதுவும் இல்லை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.**



பயங்கரவாத நடவடிக்கைகள் அல்லது இதுபோன்ற அச்சுறுத்தல்கள் குறித்து புலனாய்வு அமைப்புக்களில் இருந்து எந்தவொரு அறிக்கையும் கிடைக்கவில்லை என பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமால் குணரத்ன தெரிவித்தார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அண்மையில் வெளியிட்ட புதிய பயண அறிவுறுத்தலில் இலங்கையில் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெறலாம் என எச்சரிக்கப்பட்டிருந்தது.

சுற்றுலாத் தலங்கள், போக்குவரத்து மையங்கள், சந்தைகள், வணிக வளாகங்கள், அரச நிறுவனங்கள், ஹோட்டல்கள், கிளப்புகள், உணவகங்கள், வழிபாட்டுத் தலங்கள், பூங்காக்கள், முக்கிய விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்வுகளை குறிவைத்து இலங்கையில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்தது.

அத்துடன், கொவிட் பரவல் அதிகரித்திருப்பதன் காரணமாக இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வது தொடர்பில் மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே அமெரிக்காவின் இந்த எச்சரிக்கை பதிலளிக்கும் வகையில் இலங்கையில் பயங்கர்வாத அச்சுறுத்தல் எதுவும் இல்லை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5)

# அரசை விட்டு வெளியே வாருங்கள் தயாசிறிக்கு வெல்கம அழைப்பு

(கொழும்பு)

“அரசுக்குள் இருந்து கொண்டு அழுது புலம்பாமல், துணிகரமாக வெளியே வாருங்கள். அவ்வாறு வந்தால் அரவணைத்துப் பயணிக்கத் தயார்” என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கு அழைப்பு விடுத்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

“ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் எனது சிறந்த நண்பர். தற்போது தனது அமைச்சு குறித்து அழுது புலம்புகின்றார். நான் அமைச்சுப் பதவியின் பின்னால் ஓடவில்லை. எனவே, என் வழியை தயாசிறி பின்பற்ற வேண்டும்.

இந்த அரசு கப்பல் போல் மூழ்கப்போகின்றது. எனவே, துணிகரமாக வெளியேறுமாறு தயாசிறியிடம் நான் கோருகின்றேன்.



எனது பயணத்தை எவராலும் தடுக்க முடியாது. ஒரு கட்சி இல்லையேல் 10 கட்சிகள் உள்ளன. ஏதாவது ஒரு கட்சி எனக்குக் கிடைக்கும்” என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் உட்பட 31 பேர் கைது

(கொழும்பு)

பத்தரமுல்லை, பொல்துவ சுற்றுவட்டம் அருகே தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காக 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் இரு துறவிகளும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஜெனரல் சேர்.ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்பது பல்கலைக்கழக சட்டமூலத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட நிலையிலேயே மேற்கண்ட குழு கைது செய்யப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகள், சிவில் சமூகம், விரிவுரையாளர்கள், மாணவர்கள், தொழிற் சங்கங்கள் மற்றும் இலங்கையில் உள்ள பிற குழுக்கள் இந்த சட்டமூலத்துக்கு தொடர்ந்தும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

மேலும் உயர் கல்வியை தனியார்மயமாக்க வழிவகுக்கும் என்று அவர்கள் அஞ்சும் உத்தேச கொத்தலாவலை தேசிய பாதுகாப்பது சட்ட மூலத்தை வாபஸ் பெறுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பிரதமர் மகிந்தவுக்கு புதிய அமைச்சு



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டத்தை செயற்படுத்தும் அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இதுவரை காலமும் நிதி அமைச்சராக மகிந்த ராஜபக்ஷ கடமையாற்றியிருந்தார்.

முன்னதாக, பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டத்தை செயற்படுத்தும் அமைச்சு தொடர்பான புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# சென்.பீற்றர் படுகொலை முதல் முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வரை

## மறுக்கப்படும் நீதி



நவாலி படுகொலை நினைவு நாள் இன்றாகும்

ஈர விழிப் பொழுதுகள்
எப்போது காயும் என
எத்தனை நாள்தான்
காத்துக் கிடக்கும் தமிழினம்?

பிறர் பாவம் போக்க
தன் தோளில் பாரம் சுமந்த
யேசுபிரான் சந்நிதியில்
அடைக்கலம் என
அடைந்து கிடந்தோரை
கொத்தாய் கொன்றொழித்தது யார்?

வீடு- வாசல்- சொத்து- சுகம்
அன்பாய் வளர்த்த பிராணிகள்
அத்தனையையும் விட்டுவிட்டு
உயிருக்காய் ஓடிவந்து
கடவுள் சந்நிதியில் கூடியவர் மீது
கொட்டினர் குண்டுகளை…

எங்கும் எதிலும் இரத்தமும் சதையும்
தாய்- தந்தை- தமயன்
அக்காள்- தங்கை- பாட்டி- தாத்தா
உற்றார்- உறவினர்- சுற்றம் சூழ
மொத்தமும் சிதறிப் போயினர்

இருபத்தாறு ஆண்டுகள் கடந்தும்
சென்.பீற்றர் கோரக் குண்டுத் தாக்குதல்
தமிழர் மனங்களில் ஆறாத ரணமாய்
வலித்துக் கொண்டே இருக்கிறது….

தமிழினம் என்றால்
எங்கும் எதிலும் நீதி மறுக்கப்படும்
என்பது நீண்டு செல்கிறது
சென்.பீற்றர் படுகொலை முதல்
முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வரை..

–மாவை.நா.கஜேந்திரன்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## +1,223...

வரும் புதுவருட கொத்தணியுடன் தொடர்பு டையவர்கள் என்றும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதற்கமைய நாட்டின் மொத்த கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 269, 899 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம)

## 40 பேர் பலி...

ஒரு பெண் ணும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 29 ஆண்களும் 11 பெண்களுமாக 40 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 3,391 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## புளியங்குளம்...

ஒருவர் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

கிளிநொச்சியில் இருந்து புத்தளம் நோக்கி பொருட்களை ஏற்றிச்சென்ற பார வூர்தி புளியங்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து குடைசாய்ந்து விபத்திற்குள்ளாகியது.

விபத்தில் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் சிகிச்சை பலனின்றி ஒருவர் மரணமடைந்துள்ளதுடன், வாகனத்தின் சாரதி படுகாயங்களிற்குள்ளாகியுள்ளார்.

சம்பவத்தில் மஸ்கெலியா பகுதியை சேர்ந்த பிரவீன் (வயது - 21) என்ற இளைஞரே மரணமடைந்துள்ளார்.

விபத்து தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-299)

## மின்சாரம் தாக்கி...

யில் தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்த வேளை மின்சாரம் தாக்கியதில் 29 வயதுடைய இளம் குடும்ப பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-281)

## வவுனியாவில்...

துள்ளார்.

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து குறித்த பெண் வைத்தியசாலையின் கோவிட் விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது.

எனினும், சிகிச்சை பலனின்னி குறித்த பெண் மரணமடைந்துள்ளார். மரணமடைந்தவர் வவுனியா, மதவுவைத்தகுளம் பகுதியைச் சேர்ந்த 61 வயதுடையவராவார். (ம-250)

## யாழில் ஆசிரியர்...

ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்றிரவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட்-19 தடுப்பூசியேற்றும் திட்டத்தில் 2ஆம் கட்டத்தில் முதலாவது டோஸ் வழங்கும் பணி கடந்த ஜூலை மாதம் 5ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நடைபெற்று வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் ஜூலை மாதம் 5ஆம் திகதி முதல் நாளில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 9 ஆயிரத்து 465 பேருக்கும் 6ஆம் திகதி இரண்டாம் நாளில் 9 ஆயிரத்து 457 பேருக்கும் 7ஆம் திகதி மூன்றாம் நாளில் 12 ஆயிரத்து 34 பேருக்கும் 8ஆம் திகதியான நேற்றைய நான்காம் நாளில் 7 ஆயிரத்து 497 பேருக்கும் என மொத்தமாக 38 ஆயிரத்து 456 பேருக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலை ஆசிரியர்களுக்கு தடுப்பூசியேற்றும் பணிகள் இன்று 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும்.

மேலும், 18 வயதிற்கு மேற்பட்ட ஆபத்து நிலை உடைய கர்ப்பிணித் தாய்மார்கள், 35 வயதிற்கு மேற்பட்ட அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் அத்துடன் முன்களப் பணியாளர்களாக உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் அவர்களுடைய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் நாளை 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் தடுப்பூசிகள் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-33)

## வடக்கில் 32...

பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் ஆறு பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 418 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழ்.மாவட்டத்தில் [illegible] மாகாணத்தில் [illegible] தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் 53 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழ்ப்பாணத்தில் 06 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 வயதுச் சிறுமி ஒருவர் உட்பட ஐவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, உடுவிலில் ஒருவயது ஆண்குழந்தை ஒன்றுக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தந்தையைப்...

பிட்டார்.

"மக்களின் முன்னுரிமை எனது சொந்த முன்னுரிமையாகும். நான் ஒரு தந்தையைப்போல விரும்பத்தகாத முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கலாம்.

நாங்கள் ஒரு மோசமான சூழ்நிலையில் இருக்கிறோம். இதற்கு முன்பு நாங்கள் மிகவும் கடினமான நேரத்தில் இருந்தோம். எனவே, தயவுசெய்து எங்களுக்கு உதவுங்கள்" என்றும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். (ம)

## ஜனநாயக ரீதி...

என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் ஊடக சுதந்திரத்தை இல்லாது செய்ய முயற்சிப்பதாக தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியினரால் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "அரசமைப்பை பாதுகாத்து மனித உரிமையை பாதுகாக்கும் உரிமை அனைத்து மக்களுக்கும் உள்ளது.

இதனை இல்லாது செய்வதை நாம் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். இன்று மக்களின் வாழ்வாதாரம் உயர்வடைந்துள்ளது.

விவசாயிகளுக்கு உரம் இல்லாது போயுள்ளது. பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் இல்லாது போயுள்ளது. கடல் உள்ளிட்ட சுற்றாடல் வளம் அழிவடைந்துள்ளது. மாணவர்களின் கல்வி முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் மந்தகதியில் இடம்பெறுகின்றன.

இவையனைத்துக்கும் தீர்வொன்றை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியே மக்கள் போராடுகிறார்கள்.

இதனை மேற்கொள்ளாமல், அரசாங்கம் மக்கள் மீது அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவதானது வெட்கத்துக்குரிய தாகும்.

அச்சுறுத்தல்களை விடுத்தோ சுற்றுநிருபங்களை வெளியிட்டோ மக்களின் குரல்களை நசுக்கிவிட முடியாது என்பதை அரசாங்கம் நினைத்துக் கொள்ள வேண்டும்.

நாம் எதிர்க்கட்சியாக இருந்துகொண்டு எதிர்ப்பினை மட்டும் வெளியிட்டுக் கொண்டிருக்காமல், கொரோனா ஒழிப்பு செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கத்தயாராகவே இருக்கிறோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## உயர்கல்வியை...

கீழே செயற்படுகின்றது.

மாறாக இது உயர்கல்வியை இராணுவ மயமாக்குவதாக தெரிவிக்கப்படுவதில் எந்த உண்மையும் இல்லை என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் தொடர்பான சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் நாட்டில் இருக்கும் ஏனைய பல்கலைக் கழகங்கள் போன்றது அல்ல.

இதற்கு விசேட தனித்துவமான அம்சங்கள் இருக்கவேண்டும். அதற்காகத்தான் இதற்கு விசேட சட்டமூலம் கொண்டு வந்திருக்கின்றோம்.

குறிப்பாக நாட்டில் இருக்கும் ஆசிரியர் பயிற்சி கல்லூரி, தாதியர்களுக்கு பட்டம் வழங்கும் தாதியர் கல்லூரி. இதுவும் பல்கலைக்கழகம். இவற்றுக்கு விசேட தனித்துவம் இருக்கவேண்டும். சாதாரண பல்கலைக்கழகங்களில் மேற்கொள்வதை இங்கே மேற்கொள்ள முடியாது. இவற்றுக்கிடையில் பாரிய வித்தியாசம் இருக்கின்றது என்றார். (ம)


மெகா பவர்
திகதி 08/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0847
வெற்றி எழுத்து C சுப்பர் இலக்க 02 வெற்றி இலக்கங்கள் 10 23 49 73

மஹஜன சம்பத
திகதி 2021/07/08
சீட்டிழுப்பு இலக்கம் 4499
ஆங்கில எழுத்து P வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 5 5 7 2 2
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 08.07.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2794
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 19 21 33 71
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.07.08
சீட்டிழுப்பு இலக்கம் - 529
K 20 46 56 71
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 486 9416

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1302
வர்ணம் : கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 08.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 135,030,071
வெற்றி இலக்கங்கள் 11 25 59 67 ஆங்கில எழுத்து O
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3637
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 08.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 42,315,376
வெற்றி இலக்கங்கள் 07 08 11 24 ஆங்கில எழுத்து S
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 3,450,353/=
திகதி : 08.07.2021
வெற்றி வாரம் : 3188
வர்ணம் : மண் நிறம்
வெற்றி இலக்கங்கள் 05 11 26 49
மேடம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,997,920/=

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1476
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 08/07/2021
தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் I 14 21 67 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் 57,573,751/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு இராஜாங்க அமைச்சுக்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டன

(கொழும்பு)

இரண்டு இராஜாங்க அமைச்சுகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

அவற்றுக்கான இராஜாங்க அமைச்சர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில், நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

அந்த வகையில், சேதனப் பசளை உற்பத்தி மேம்பாடு, விநியோக ஒழுங்குப்படுத்தல், நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு செய்கை மேம்பாடு, விதைகள் உற்பத்தி, உயர் தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சராக சஷிந்திர ராஜபக்ஷ பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

அத்துடன், கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ் நிலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக மொஹான் டி சில்வா பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். (ம)

# இராணுவப் பல்கலை மூலம் சர்வாதிகாரப் போக்கினை அரசு கையாள முயற்சி

## சபையில் எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

சாதாரண பல்கலைக்கழக முறைமைக்குள் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை கொண்டுவருவதாலும், சாதாரண மாணவர்களை இதற்குள் ஈர்த்துக் கொள்வதாலும் பொதுக் கல்வியை இராணுவ மயப்படுத்தும் பாரிய அச்சுறுத்தல் நிலையொன்று உருவாகியுள்ளதென பிரதான எதிர்க்கட்சி சபையில் குற்றம் சுமத்தியது.

நெருக்கடி நிலைகளை கையாள முடியாது அரசாங்கம் பிரச்சினைகளை சமாளிக்க சர்வாதிகார போக்கினை கையாள முயற்சிக்கின்றது என்றும் குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர்கள் இதனை கூறினர்,

இது குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவிக்கையில்,

இராணுவ பல்கலைக்கழகம் உருவாக்கப்படுவதால் நாட்டின் ஏனைய பிரச்சினைகள் தீரப் போவதில்லை. நாட்டின் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் இணைத்துக்கொள்ளும் வீதம் அதிகரிக்க வேண்டியுள்ள போதிலும், அதனை முன்னெடுக்க முடியாதுள்ளது.

அதேபோல் உயர் கல்வியில் மாணவர்களின் சிந்தனையை மட்டுப்படுத்த கூடாது. ஆனால் இராணுவ பல்கலைக்கழகத்தில் அது மட்டுப்படுத்தப்படுகின்றது.

அதுமட்டுமல்ல பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மாறாக இராணுவ பல்கலைக்கழகம் உருவாக்கப்படுகின்றது.

இதனால் பாதுகாப்பு துறையில் உள்ளாகாத மாணவர்களை இணைத்துக்கொள்ளும்போது நெருக்கடி நிலையொன்று உருவாகும். பாதுகாப்பு விடயங்களை மாத்திரம் இந்த பல்கலைக்கழகம் கையாளும் என்றால் அவ்வாறு இயங்கலாம், ஆனால் ஏனைய துறைகளில் இது தலையிடுகின்ற காரணத்தினால் கண்டிப்பாக இந்த பல்கலைக்கழகம் தேசிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் கொண்டு வரவேண்டும்.

இராணுவ பல்கலைக்கழகம் உருவாவதை நாம் எதிர்க்கவில்லை, ஆனால் இப்போது கொண்டுவந்திருக்கும் சட்டமூலம் பொது கல்வியை இராணுவ மயப்படுதுவதாக அமைகின்றது. அதனை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். எனவே தான் இந்த சட்டமூலத்தை நாம் எதிர்க்கின்றோம் என்றார். (ம)

# இராணுவமயம் என்று விமர்சிப்பதை கைவிடுங்கள் இராணுவ அதிகாரி ஒருவர் ஜனாதிபதியாக இருப்பதில் தவறு என்ன உள்ளது?

## சபையில் அமைச்சர் ரோஹித அபே குணவர்த்தன

(கொழும்பு)

நாட்டின் ஜனாதிபதி ஒரு இராணுவ அதிகாரியாக இருப்பதிலும், பாதுகாப்பு அமைச்சர் ஒரு இராணுவ அதிகாரியாக இருப்பதிலும் என்ன தவறு உள்ளது? ஜனாதிபதியினால் மக்கள் சேவையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கும் வேளையில், இராணுவம் அதற்கு முன்னின்று செயற்படும் நிலையில் இராணுவ மயம் என்ற பெயரை சூட்டி விமர்சிப்பதை கைவிட வேண்டும் என அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கி உருவாக்கிய அரசாங்கத்தில் பாதுகாப்பு செயலாளராக ஹேமசிறி பெர்னாண்டோவை நியமித்தீர்கள். ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்று அந்த இடத்திற்கு வந்த பாதுகாப்பு செயலாளர் கூறியது என்ன? தாக்குதல் நடத்தப்படும் என நினைத்தோம். ஆனால் இவ்வாறு தாக்குதல் இடம்பெறும் என நினைக்கவில்லை என்றார்.

இவ்வாறான ஆட்சியாளர்கள் வேண்டுமா? இந்த தாக்குதல் தடுக்கப்பட்டிருந்தால் அப்பாவி பொதுமக்கள் பாதுகாக்கப்பட்டிருப்பார்கள். பொருத்தமான நபர் இன்று ஆட்சியில் உள்ளார், அதுமட்டுமல்ல இராணுவத்தை பிரதிநிதித்துவப்படுத்திய தலைவர் ஒருவர் பிரதான ஆசனத்தில் அமர்ந்துள்ளதை ஏற்றுக்கொள்ளமுடியாத சிலர் விமர்சித்து வருகின்றனர்.

நாட்டினை பாதுகாத்து, கோவிட் நிலைமைகளை சரியாக கட்டுப்படுத்தும் இராணுவத்தை இன்று விமர்சிக்கின்றனர்.

இன்று சவேந்திர சில்வாவை விமர்சிக்கும் நபர்கள் எவ்வாறு அன்று சரத் பொன்சேகாவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க தீர்மானம் எடுத்தீர்கள்.

இன்று நாடே கோவிட் நிலைமையில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் அனாதரவாகியுள்ள நிலையில் சுகாதார துறையினர் போராட்டம் நடத்துகின்றனர்.

எப்போதுமே இல்லாத அளவிற்கு நாட்டில் போராட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளும் முயற்சிகளே இவை அனைத்தும். இதனால் பாதிக்கப்படுவது வேறு யாருமல்ல எமது அப்பாவி மக்களே. அதனை தவிர்க்க இராணுவத்தை பயன்படுத்தி கோவிட் தடுப்பு சேவைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்தது தவறா? உங்களில் ஒருவர் கொவிட் வைரஸ் தொற்றில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு சிகிச்சை வழுங்கமுடியாத நிலையில் இராணுவம் உதவி செய்வதை நீங்கள் மறுப்பீர்களா?

மக்கள் சேவையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கும் வேளையில் இராணுவம் அதற்கு முன்னின்று செயற்படும் நிலையில் இராணுவ மயம் என்ற பெயரை சூட்டி விமர்சிக்கிறனர் என்றார். (ம)

# கனடாவில் கார் விபத்து அல்வாயை சேர்ந்த குடும்பஸ்தர் பலி

கனடாவில் இடம்பெற்ற கார் விபத்தில் வடமராட்சி அல்வாய் தெற்கு பகுதியை சொந்த இடமாக கொண்ட கந்தையா பத்மரூபன் ( வயது 44 ) என்பவர் உயிரிழந்துள்ளளார். நேற்று முன்தினம் புதன்கிழமை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவர் ஒரு பிள்ளையின் தந்தை ஆவார். புலம் பெயர்ந்து குடும்பத்துடன் வசித்துவந்த நிலையில் இந்ந துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-60)


**DEWMAS JOB BANK**

வேலையாட்கள் தேவையா?

074 138 3368

யாழ். வேலை வாய்ப்புகளுக்கு

dewmasweb.com

51, Amman Road, Nallur.

(7069)

நவீன இயந்திரத்தின் மூலம் மிகக் குறைந்த விலையில் தேங்காய் எண்ணெய் ஊற்றிக் கொடுக்கப்படும்.

மதுசாலினி அரைக்கும் ஆலை

பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் அருகாமை, இணுவில்.

070 494 3990

(7154)

**மாட்டுக் கன்றை காணவில்லை**



இப்படத்தில் உள்ள 2 மாத நாம்பன் கன்று முள்ளி - வரணிப் பகுதியில் தவறிவிட்டது. கன்றைப் பிரிந்த தாய்ப்பசு கதறியவண்ணம் உள்ளது. இக்கன்றைக் கண்டவர்கள் தயவு செய்து **077 315 1326** என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தகவல் தருமாறு உருக்கமாக கேட்டுக் கொள்கின்றோம்.

**காணி விற்பனை**

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட ( யாழ். நகரில் இருந்து 11/2 Km தூரம் ) ஒட்டுமடம் சந்தி, மானிப்பாய் வீதி, முதலாம் ஒழுங்கையில் 03 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

( பிரித்துக் கொடுக்கப்படும்.)

1 பரப்பின் விலை 5 இலட்சம் மட்டும்

076 221 2037, 076 734 1023

077 064 2661

(7160)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் உரும்பிராய் கிருஷ்ணன் கோவிலடி மெயின் றோட்டுடன் 6 பரப்புக் காணி விற்பனைக்கு.

2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

077 623 4204, 077 225 9798

076 412 5935

(7160)

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

UK-1000/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

0768226240 DHL

(C-2269)

அண்ணா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/=

070 3305500

077 888 9388

(C-2270)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை

பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை

மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org